92ஆவது
ஜனன நினைவு



திரு. சி. சி. கந்தையா
(மாரயன் பென்சனியர்)
தோற்றம்: 28-08-1894
மறைவு: 16-11-1959

தேவாலய வீதி,
சங்கானை.



A/L 87
தூய பிரயோக கணிதம்
பகல் நேர வகுப்பு
ஆரம்பம்; 5-9-86
10-30: காவிஸ்
11-45: சுட்சர கணிதம்
ஆசிரியர்:
ரவிமோகன்
யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோயிலுக்கும் இடையில்)


# உத்தேச மாகாண சபைகளால்

# முஸ்லிம்களுக்கு ஏதும் கிடைக்குமா?

"வடக்கும்கிழக்கும் இணைந்த ஒரு சபையைக் கூட்டணியினர் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள், எமது சந்திப்பின்போது இதனைக் கூட்டணித் தலைவர்கள் உறுதியாகத் தெரிவித்தனர்.

காத்தான்குடி முன்னாள் பட்டினசபைத் தலைவரும், கிழக்கிலங்கை முஸ்லிம் மஜ்லிஸ் செயலாளருமான ஜனாப் ஏ. அகமது லெவ்வை மேற்கண்டவாறு கூறினார்.

அம்பாறை மாவட்ட பள்ளி வாசல்களின் பேரவை நடத்திய, உத்தேச மாகாணசபை அமைப்பில் கிழக்கு மாகாண முஸ்லிம்களின் நிலைப்பாடுபற்றிய பேராளர் மாநாட்டின் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

பேரவைத்தலைவர் அல். ஹாஜ் எம்.ஐ.எம் மீரா லெவ்வை தலைமையில், அட்டாளைச்சேனை ஆசிரிய பயிற்சிக் கலாசாலை மண்டபத்தில் மாநாடு நடைபெற்றது.

பிரதித் தபால், தந்தித் தொடர்புகள் அமைச்சர் ஜனாப். எம் ஏ அப்துல் மஜீத், பொத்துவில் முதலாவது எம் பி ஜனாப். எம் ஐ உதுமாலெவ்வை, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சட்டத்தரணி ஜனாப் எம் எச். எம் அஷ்றப் ஆகியோர் பிரதம அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

ஜனாப் அகமது லெவ்வை தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது;

"நீண்ட காலமாகத் தமிழ் மக்கள் நடத்திய போராட்டமும், அவர்களது தியாகமும், தமிழ் அரசியல் தலைவர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள் காரணமாகவும் தான் இன்றைய பேச்சு வார்த்தை நிலை இங்கு ஏற்பட்டுள்ளது.

பத்தாயிரம் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டும், வீடுகள் எரிக்கப்பட்டும், நன்கு லட்சம் தமிழர்கள் உலகநாடுகளில் தஞ்சம் கோரியும் இளைஞர்கள் உயிர்த்தியாக நிலைக்கு கட்டப்பட்டிருக்கும் இந்த நிலையில் தனி மாகாண சபை அமைப்பை தமிழர்கள் ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

சென்றமுறை மட்டக்களப்பிலிருந்து எங்கள் குழுவொன்று கூட்டணித் தலைவர்களைச் சந்தித்த போது இணைப்பு இல்லாத சபையை ஏற்கமாட்டோமென அவர்கள் அழுத்தமாகத் தெரிவித்தனர்

இந்தநாட்டில் சமஷ்டி ஆட்சி ஒன்று ஏற்படவேண்டுமென தந்தை செல்வா கூறியபோதும், பண்டா — செல்வா, டட்லி—செல்வா ஒப்பந்தங்களின் போதும் முஸ்லிம்களாகிய நாம் நமது நிலைபற்றிச் சிந்திக்கவில்லை.

நாம் இன்று காலம் கடந்தே நமது நிலை என்ன? என்பது பற்றிச் சிந்திக்கத் தலைப்பட்டுள்ளோம்.

மாகாண ஆட்சிமுறையைத் தவிர எதுவும் வழங்கத்தயாரில்லையென அரசு கூறுகிறது அவ்வாறு மாகாண ஆட்சியை அரசு கட்டாயமாகக் கொண்டுவந்தாலும், வடக்கிலும், கிழக்கிலும் அமைக்கப்படுமோ?

இப்பொழுது கூறுகிறது. இப்படியான அரசு வடக்கு, கிழக்கு இணைப்பை ஏற்கமாட்டாது என்று எப்படி சம்மதிக்கும்?" (கூட்டத்தில் ஒரு குரல்; "நீங்கள் பகற்கனவு காணவில்லை, திருப்திகள் குறிப்பிடுத்துக்கொண்டி

> ★ "அம்பாறை மாவட்ட முஸ்லிம்களை மட்டும் உள்ளடக்கியதாக ஒரு மாகாணசபை வந்தால் அதனை முஸ்லிம்கள் ஏற்கக் கூடாது"
>
> — ஜனாப் அகமது லெவ்வை
>
> கிழக்கிலங்கை முஸ்லிம் மஜ்லிஸ் செயலாளர்
>
> ★ "வடமாகாணத்துடன் கிழக்கின் தமிழ்ப் பிரதேசங்கள் சேர்ந்த ஒரு சபை உருவாக வேண்டுமென்றால் நாம் வடமாகாணத்திலுள்ள முஸ்லிம்களையும் கவனத்திற் கொள்ள வேண்டும்."
>
> -சட்டத்தரணி ஜனாப் எம். எச். எம் ஜெளபர்
>
> அம்பாறை மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர்
>
> ★ அரசின் திட்டமிட்ட குடியேற்றத்தாலும் மகாவலி 'சி' இணைப்பு மூலம் செய்யப்பட்ட சதியாலும் அம்பாறை மாவட்டத்தில் சிங்களவர் பெரும்பான்மை ஆகிவிட்டார்கள்.
>
> - கவிஞர் ஜனாப் மருதூர்க்கனி.
>
> முஸ்லிம் காங்கிரஸ்.
>
> ★ அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை, பொத்துவில்,கல்முனை சேர்ந்த புதிய மாவட்டத்துடன் திருமலை, மட்டக்களப்பு, மன்னார் மாவட்டங்களில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதிகளையும் உள்ளடக்கியதாக ஒரு சபை எமக்கென கோரவேண்டும்.
>
> - சட்டத்தரணி ஜனாப் எம்.எச்.எம். அஷ்றப்.
>
> தலைவர், இலங்கை முஸ்லிம் காங்கிரஸ்

அதற்கான தேர்தல்கள் நடக்குமா? என்பதிலும் சந்தேகமே கொள்ள வேண்டியுள்ளது

மேலும், அம்பாறை மாவட்ட முஸ்லிம்களை மட்டும் உள்ளடக்கியதாக ஒரு மாகாண சபை வந்தால் அதனை முஸ்லிம்கள் ஏற்கக்கூடாது

மட்டக்களப்பு, திருமலை மாவட்டங்களிலுள்ள முஸ்லிம் பிரதேசங்களையும் உள்ளடக்கியதாகவே ஏற்கவேண்டும்'' — இவ்வாறு அவர் கூறினார்.

அம்பாறை மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் சட்டத்தரணி ஜனாப் எம் எச். எம் ஜெளபர் பேசுகையில்:

''வடமாகாணத்துடன் கிழக்கின் தமிழ்ப் பிரதேசங்கள் சேர்ந்த ஒரு சபை உருவாக வேண்டுமென்றால், நாம் வடமாகாணத்திலுள்ள முஸ்லிம்களையும் நமது கவனத்திற் கொள்ள வேண்டும்.

தீவிரவாதிகளுடன் பேசமாட்டோம், இந்திய அரசின் ஆதரவு தேவையில்லை என்று கூறிய அரசுதான் இம்புலிக் தீவிரவாதிகளுடன் பேசியது. இந்தியாவின் ஆதரவுடன்தான் பிரச்சினை தீர்க்கப்படவேண்டுமென

ருக்கிறார்கள்'') — என்று கூறினார்

கவிஞர் ஜனாப் மருதூர்க்கனி (முஸ்லிம் காங்கிரஸ்) பேசுகையில்;

அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்களின் விகிதாசாரம் பாதுகாக்கப்படவேண்டுமெனக் கூறுகிறோம். ஆனால் ஏற்கனவே அதனை நாம் தாரைவார்த்துக் கொடுத்து விட்டோம்

இங்கு அரசின் திட்டமிட்ட குடியேற்றத்தா

> உத்தேச மாகாண சபை அமைப்பில் கிழக்கு மாகாண முஸ்லிம்களின் நிலைப்பாடு பற்றிய பேராளர் மாநாடு ஒன்றை அம்பாறை மாவட்ட பள்ளிவாசல்களின் பேரவை அண்மையில் (10-08-86 இல்) நடத்தியது.
>
> இந்த மாநாட்டில் கருத்துரைகள் பல முஸ்லிம் பிரமுகர்களால் வழங்கப்பட்டன அவர்களது உரைகள் இங்கு எமது அம்பாறைமாவட்ட செய்தியாளரால் தொகுத்து அளிக்கப்படுகின்றது.—

லும், மகாவலி 'சி' இணைப்பு மூலம் செய்யப்பட்ட சதியாலும் சிங்களவர்கள் இந்த மாவட்டத்தில் பெரும்பான்மையாகி விட்டார்கள்.

இந்தநிலை தெரிந்தும் எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் இன்னும் சும்மா பார்த்துக் கொண்டுதானிருக்கிறார்கள்! நாளையும் பார்த்துக் கொண்டுதான் இருப்பார்கள்!!

பேரினவாதக் கட்சிகளின் மாய வலையில் நாம் மயங்கிக்கிடக்கும் வரை விமோசனம் பெற முடியாது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்கென மாநாடுகள் கூட்டப்பட்ட போதெல்லாம் ஏனைய இனங்கள் எல்லாவற்றுக்கும் கட்சிகள் இருந்தன. பாவம், முஸ்லிம்களின் குரல் எழுப்ப கட்சியே இல்லை. எனவே முஸ்லிம்களுக்கென ஓர் அரசியல் கட்சி தேவை என்பதை நாம் உணரவேண்டும் '' என்றார்.

இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் சட்டத்தரணி ஜனாப். எம். எச். எம் அஷ்றப் பேசுகையில்;

"கிழக்கு மாகாண முஸ்லிம்கள் இன்று வரலாற்றின் திருப்புமுனையில் நின்று கொண்டிருக்கின்றனர். இந்த முக்கிய கட்டத்தில் நாம் மதிநுட்பத்துடன் முடிவுகளை எடுக்கவேண்டும்.

ஒவ்வொரு ஆலோசனையும் [illegible]

உண்டு. பாதிப்பும் உண்டு என்பதையும் நாம் உணரவேண்டும்.

நம் கடலுக்குள் விழுந்து அழியவேண்டிய இந்நிலை எந்த அமைப்பு ஏற்பட்டாலும் முஸ்லிம்களின் பலம் உறுதிப்படுத்தப்படவேண்டும்

மாவட்ட சபைதான் தருவோம் என்று கூறிய அரசு இன்று மாகாண சபை தரப்போவதாகக் கூறுகிறது.

"மாகாண சபை ஏற்பட்டு ஐந்து வருடத்தின் பின் கிழக்கிலுள்ள 32 வீதமான முஸ்லிம்களின் பலம் இன்னும் குறையலாம்

குடியேற்றங்கள் தொடர்பில் அரசு உத்தேசித்துள்ளவாறு யோசித்தால், முஸ்லிம்கள் புதிதாக குடியேறி வாழமாட்டார்கள்

ஆனால் தமிழர்கள் திருமலை துறைமுகத்தை மையமாக வைத்து குடியேற வருவதுடன், மலையகத் தமிழரும் குடியேற்றப் படுவர்.

இதனால் நாம் கிங்மேக்கர்ஸ்' என்ற நிலையை இழக்கப்போகிறோம்.

நடைபெறும் பேச்சு வார்த்தைகளில் முஸ்லிம்களின் அபிப்பிராயங்களைப் பற்றி யாரும் கவனிப்பதில்லை ஏவல் நாயின் நிலையில் தான் நாம் நிற்கிறோம்

முஸ்லிம்களின் பலம் காரணமாகவே வடக்கு, கிழக்கு இணைப்பை வற்புறுத்த முடியாத நிலை இந்தியாவுக்கும், கூட்டணிக்கும் ஏற்பட்டுள்ளது

இந்த நிலையில் கூட்டணி இன்று புதிய ஓசை ஒன்றை எழுப்புகிறது; வடக்குடன் கிழக்கிலுள்ள தமிழ் மொழி பிரதேசங்களை இணைத்துத் தருமாறு அது கோருகிறது

இப்படிக் கோருவதால் அவர்களது பலம் இன்னும் கூடும் என்பது திண்ணமாகும், அத்துடன் அவர்களது அரசியல் எதிர்காலத்தை உறுதிப்படுத்துவதாகவே இருக்கும்.

அம்பாறை மாவட்டத்தை முஸ்லிம்களுக்கென விட்டுத் தருவதாக கூட்டணி கூறுவதும் அவர்களைப் பலப்படுத்தும் நோக்குடனேயே ஆகும்

திரு. ஜே. ஆர் அரசியல் கொள்கையில் விவேகமானவர் அவர் கூறுகிறார் மாகாணசபை எல்லைகளில் மாற்றம் வராது என்று

ஆனால் எல்லைகளை மாற்றாமலே தமிழர்களுக்கென மட்டக்களப்பு, திருமலை மாவட்டங்களை இணைத்து ஒரு மாகாண சபையை உருவாக்கலாம் தானே!

அப்பொழுது மட்டக்களப்பு திருமலை மாவட்டங்களில் வாழும் முஸ்லிம்களின் நிலை அதோ கதியாகத்தான் ஆகும்.

அம்பாறை மாவட்டத்துக்கென ஒரு மாகாண சபை வந்தாலும் அதனால் சிங்களவர்களுக்கே இலாபம் ஏற்படும்

இத்தகைய நிலை தொடர்ந்தால் முஸ்லிம்கள் பலவீனமான சமூகமாக மாற்றப்பட்டு 10 இலட்சம் முஸ்லிம்கள் என்ற எமது பலம் 10 துண்டுகளாக வெட்டப்படும்.

அவ்வாறின் முஸ்லிம் சமுதாயத்தைப் பலிக்கடாவாக்கும் நிலையில் தான் இனப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும்

'எனவே எமது முதுகை குத்தவேண்டிய நிலையில் நிற்கும் நாம் கோரப்போகும் மாற்று நிலை என்ன?

அம்பாறை மாவட்டத்தின் சம்மாந்துறை, பொத்துவில், கல்முனை தொகுதிகள் சேர்ந்த புதிய மாவட்டத்துடன், மட்டக்களப்பு திருமலை, மன்னார் மாவட்டங்களில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் பகுதிகளையும் உள்ளடக்கியதாக ஒரு

(8 ஆம் பக்கம் பார்க்க)


காணவில்லை

பரமேஸ்வரநாதன். சோமேஸ்வரன் ஆகிய எனது அடையாள அட்டை (இலக்கம். 611381420V) வவுனியா புகையிரத நிலையத்திற்கு அருகில் வைத்து 27 08 86 அன்று காணாமற் போய்விட்டது. கண்டு எடுத்தவர்கள் உடனடியாக இவர் கோவிலடி வட்டு-7மற்கு வட்டுக்கோட்டை விலாசத்திற்கு அனுப்பி வைத்து உதவுங்கள்.



## தொழிற் பயிற்சிகள்

பின்வரும் பயிற்சிகளுக்கு 16—23 வயதுக்குட்பட்ட ஆண்களிடமிருந்து புரட்டாதி 10 ம் திகதிக்கு முன் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விவசாயம் — ஒரு வருடம் கட்டணம் இல்லை
2. வெல்டிங் — 4 மாதம் கட்டணம் மாதம் ரூபா: 400

(முழுப்பயிற்சிக்கும் ரூபா: 1600)

இப் பயிற்சிகளுக்குத் தெரிவு செய்யப்படுவோர் விரும்பினால் இலவசமாய் நிலையத்தில் தங்கியிருக்கலாம்.

தங்குமிடமும் உணவும் இலவசம்.
பயிற்சி முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

பணிப்பாளர்,
வை. எம். சி. ஏ
இளைஞர் பயிற்சி நிலையம்,
பரந்தன்



## பிரயாண ஒழுங்குகள்

★ ஹொலண்ட்
★ பெல்ஜியம்
★ டென்மார்க்
★ பிரான்ஸ்
★ ஜேர்மன் ★ கனடா
★ ஸ்பெயின் ★ சுவீடன்

ஆகிய நாடுகளுக்கு பிரயாண ஒழுங்குகளை மேற்கொள்ளவும் மற்றும் பாஸ்போர்ட், விசா, பொன்ட், (BOND) ரிக்கட் ஆகியனவும் செய்துகொடுக்கப்படும்

INTERSUN GROUP

சின்னத்தம்பி அவெனியூ.
(மகளிர் கல்லூரிக்கருகாமையில்)
மானிப்பாய்



## கண்ணீர் அஞ்சலி



கடமையே கண்ணியமாக கடைசி நேரம் வரை கடமையாற்றி உயிர்நீத்த உத்தமன்
சூரியகுமாருக்கு
எமது
கண்ணீர் அஞ்சலி

சிக்மா பம்ப்ஸ்
CEYGMA PUMPS
United Agro Engineering
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். நாவற்குழி, கைதடி.


## அரசாங்க அலுவலகங்களில்... 'சிகதி'

### பாடசாலைகளில் புகைத்தலை நிறுத்த அபிவிருத்திச் சங்கங்களின் உதவி

கடமையின்போது இறக்க நேரிடும் அரசாங்க ஊழியர்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்க அமைச்சரவை தீர்மானித்துள்ள போதிலும் இதனை உடனடியாக நடைமுறைப்படுத்த தீர்க்கமான அறிவுறுத்தல் வேண்டும். இது சம்பந்தமான சுற்றறிக்கையொன்றினை நிர்வாக அமைச்சு வெளியிட்டபோதிலும் தமிழ் மொழிச் சட்ட அமுலாக்கல் போல இருக்கக் கூடாது. இன்றைய சூழ்நிலையில் அரசாங்கம் இதனை தனியார் துறை ஊழியர்களுக்கும் பிரயோகிக்கும் வழியில்லை என்ன? இதற்காக இதுவரை மரணமானவர்களின் விபரங்களைச் சேகரிக்கவும் அதனோடு தொடர்பான பிற காரியங்களைக் கவனிக்கவும் ஓர் அமைச்சை இதன் கீழ் ஓர் திணைக்களத்தை ஏற்படுத்தலாமே இதில் அரசிற்கு அதிக சிரமம் இருக்காது.

இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் தனியார் டம் படிப்படியாக பரப்படுத்தி வருகின்றது. இதனால் பொது மக்கள் பெரிதும் பாதிப்படைந்து வருகின்றனர். இதற்கு தனியாரிடம் போக்குவரத்து சேவையை ஒப்படைத்தது ஓர் எடுத்துக்காட்டு என்று பல பிரயாணிகள் அடிக்கடி மந்திரியாருக்கு புகார் செய்து வருகின்றனர் இப்பிரச்சினையை அரசு விரைவில் தீர்க்க வேண்டும். இப்போது போக்குவரத்துச் சேவை அதிகரித்து விட்டது. அத்துடன் தனியார் சேவையின் கட்டண வித்தியாசமும் வசதி குறைந்த நிலையில் அன்றாட வாழ்க்கையில் ஈடுபடுபவர்களுக்கு ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது இவற்றை எல்லாம் நெறிப்படுத்த நீண்ட காலம் வேண்டியதில்லை இதற்குரிய திணைக்களத்தினர் கவனிப்பார்களா?

★ ★

கல்வித் திணைக்களம் பாடசாலைகளில் புகைத்தலை நிறுத்துவதற்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் உதவியைக் கோரியுள்ளது அதிபர்களுக்கு அனுப்பிய சுற்றுநிருபத்தில் பாடசாலையில் மாணவர்கள் முன் ஆசிரியர்கள் புகைத்தலை தவிர்ப்பதுடன் பாடசாலை சிற்றுண்டிச்சாலைகளில் பீடி, சிகரட் முதலிய விற்பனை நிறுத்தப்படல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த முன்மாதிரியை சகல பாடசாலைகளும் பின்பற்றுவது ஒழுக்கத்தை பேண உதவும். அத்துடன் ஆசிரியர்கள் முன்மாதிரியாக நடந்தால் தான் மாணவர்களும் அவர்கள் மேல் நன்மதிப்பையும் நம்பிக்கையும் வைத்துக் கொள்வர் மனவலிமை உள்ள ஆசிரியர் குழாம் இதனை செயற்படுத்துவதில் கஷ்டங்களை எதிர்நோக்க மாட்டார்கள் என்பது உறுதி.

★ ★

அரசினால் சமாளிக்க முடியாத சில திணைக்களங்களின் நிர்வாகத்தை

கணக்காளர் நாயகம், திணைக்களங்களின் குறைபாடுகளை புதிய கோணத்தில் இருந்து அணுக உத்தேசித்துள்ளார். ஒவ்வொரு திணைக்களத்திற்கும் கிடைக்கும் பணம் எந்த அடிப்படையில் செலவு செய்யப்படுகின்றது; அதன் பெறுமதி என்ன என்பதேயாகும். இதற்காக சில திணைக்களங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. கணக்காளர் நாயகம் சில திணைக்களங்களின் நடைமுறைகளை ஆராய ஆரம்பித்த போதிலும் அதிகமானவை தனியார்துறை கணக்காளர்களினாலேயே பரிசிலனை செய்யப்படுகின்றன எது எப்படியாக இருந்த போதிலும் அரசு பணத்தை சரியான முறையில் நிர்வகிக்க முடியாதவர்களையும் அதனை பெறுமதியற்ற வகையில் செலவு செய்பவர்களையும் வலுவான சட்டத்தின் கீழ் அரசு கொண்டுவர வேண்டும். அல்லாவிட்டால் கணக்காளர் நாயகம் ஆண்டு அறிக்கைகள் தூசுபடிந்த குறிப்புக்களாகவே இருக்கும்.


## நன்றி நவிலல்



மலர்வு: 25-02 1923
உதிர்வு: 23-08-1986

மில்க்வைற் தொழிலக ஸ்தாபகர்
கந்தையாபிள்ளை தம்பதிகளின்
சிரேஷ்ட புத்திரன்
கந்தையாபிள்ளை இரத்தினகோபால்
அவர்களின்

24-8-86 அன்று நடைபெற்ற மரணச் சடங்கில் பங்குபற்றி இறுதியாத்திரையில் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்தவர்கள், தந்திகள் அனுப்பியோர், மலர்மாலை, மலர்வளையம் சாத்தியோர் யாவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
சகோதரர்கள். மருமக்கள்,
மைத்துனர், மைத்துனிகள், பேரப்பிள்ளைகள்.
'மில்க்வைற் இல்லம்'


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பறங்கியர்களுக்கு எதிராக யாழ். அரசு போர் முழக்கம்!

வியாபாரமென்ற போர்வையில் வந்த வெள்ளைப் பறங்கியர் பண்ணைக்காட்டுக்கு நடுவே மண்கோட்டை கட்டியதையும், மறைவாக ஆயுதங்கள் செய்து குவிப்பதையும் நம்பிக்கைத் துரோகமாகவும், இராஜத்துரோகமாகவும் கருதிய சங்கிலி மன்னன் அப்பறங்கியர் மீது ஆவேசமுற்று போருக்கு அறைகூவல் விடுத்துச் சென்ற பின்னர் பதற்றத்துடன் மண்கோட்டைக்குள் புகுந்த பறங்கியர் அவசர அவசரமாக ஏனைய சகாக்களுடன் மந்திராலோசனை நடத்துகின்றனர்.

கோட்டைக்குள் ஏராளமான பறங்கியர் கூடியிருந்தாலும், தாராளமான ஆயுதங்கள் குவிக்கப்பட்டிருந்தாலும் 'சங்கிலி' என்ற பெயரைக் கேட்டதும் கிலி கொள்ளும் பறங்கியருக்கு மன்னன் கடைசியாகச் சொல்லிச் சென்ற 'வெற்றி நமதே' என்ற வார்த்தைகள் அடிவயிற்றைக் கலக்கிக் கொண்டிருந்தன. யாழ்ப்பாண இராச்சியத்தின் மீது பதுங்கியிருந்து பாய்வதற்குப் பறங்கியர் இரகசியத் திட்டம் தீட்டிக் கொண்டிருந்தார்களாதலால் எதிர்பாராத விதமாக மன்னன் திடீரென்று போருக்கு அழைப்பு விடுத்தது அவர்களை நிலைகலங்கச் செய்தது.

ஆம்—பறங்கியர் ஒரு மோசடிப் போருக்கு ஆயத்தம் செய்தவேளை மன்னன் அவர்களை நேரடிப் போருக்கு அழைத்ததால் திகில் கொண்டனர்.

அதுமட்டுமன்றி—'இது யாழ்ப்பாண இராச்சியம், நீங்கள் தோற்பது நிச்சயம்' என்ற மன்னனின் வீரமுழக்கமும் பறங்கியரை இடிமுழக்கம் கேட்ட நாகம் போல் பயங்கொள்ளச் செய்திருந்தது எந்த நாட்டிலும் கண்டிராத வகையில், எண்திசையும் கேட்டிராத வகையில் மன்னன் ஒருவன் எதிரிகளின் கோட்டை வாசலில் நின்று விடுத்த அறைகூவலல்லவா அந்தப் போர்க்குரல்! மன்னனின் போர்க்குரல் பறங்கியரின் மனதில் ஒலித்து எதிரொலித்துக் கொண்டேயிருக்கிறது நாளை சூரியோதயத்தின் பின் தாம் போர்க்களம் போகாவிட்டால் மன்னன் சொல்லியவாறு மறு நாள் அவன் மண் கோட்டையை முற்றுகையிட்டு அதனை மண்மேடாக்கிவிடவும் கூடுமென்ற அச்சமும் பறங்கியரைப் பிடித்தாட்டுகிறது வேறு வழியின்றி போர்க்களம் செல்வதற்கான ஆயத்தங்களில் ஈடுபடுகின்றனர்.

## பண்ணையில் ஓர் மண் கோட்டை எழுந்ததென்ன? நாட்டு நடப்பு அறியாமல் கண்மூடி இருந்ததென்ன? அண்ணனான மந்திரியிடம் சங்கிலி மன்னன் வினா

## இரு தரப்பினரும் போருக்கு ஆயத்தம்

அதன் நிமித்தம் ஏலவே வியாபார வேடத்தில் நெடுந்தீவில் வந்து குவிந்திருக்கும் பறங்கிக் கூட்டத்தை உடன் பண்ணைக்காட்டுக்கு வந்து சேருமாறும், தரங்கம்பாடியிலிருக்கும் பறங்கித் தலைவனுக்கு சங்கிலி மன்னனின் போர் அறைகூவல் பற்றியும் மேலும் படைகளை உடன் அனுப்பி வைக்குமாறும் தகவல் அனுப்பத் தீர்மானிக்கப்படுகிறது. பண்ணைத்துறையிலிருந்து இரண்டு ஓடங்கள் அத்தகவல்களை எடுத்துக் கொண்டு நெடுந்தீவுக்கும், தரங்கம்பாடிக்கும் விரைகின்றன.

சங்கிலி மன்னனின் எதிர்பாராத போர் அறைகூவலினால் பறங்கியர் பெரும் பீதியுற்றிருந்த போதிலும் தாம் கொண்டுள்ள புதுவகை ஆயுதங்களின் நிமித்தம் மதுவகையும் பருகிக் கொஞ்சம் தைரியமாகவிருக்கின்றனர்.

மறுபுறம்—

பண்ணைக்காட்டிலிருந்து வாயு வேகத்தில் தன் புரவி மீது அரண்மனையை அடைந்த சங்கிலி மன்னன் சேனைத் தளபதி வீரமாணிக்க தேவனிடம் பறங்கியர் கட்டிய மண் கோட்டை பற்றிச் சொல்ல, அது கேட்டு தீ மிதித்தவன் போல் துள்ளிக்குதித்த தளபதியிடம் நாளை சூரியோதயத்தின் பின் பறங்கியருடனான போருக்கு ஆயத்தம் செய்யும்படி கட்டளையிட்டு விட்டு ஒற்றர் பாசறைக்குச் சென்று திரும்பும் வழியில் அவ்விடம் அவசரமாக மந்திரி பரநிருபசிங்கன் வந்ததைக் கண்டு 'சேதி அறிந்தீர்களா மந்திரியாரே' என்று வினவ 'எல்லாம் கரைப்பிட்டி வன்னியன் மூலம் அறிந்தேன் மன்னா' என்கிறான் மந்திரி.

**ம. க. அ. அந்தனிசில்**

மன்னன்: நான் முன்னர் சொன்னேன். கேட்டீர்களா? பறங்கியரை வியாபாரத்துக்கு அனுமதித்தால் விபரீதம் நடக்குமென்றும், விடு கட்ட அனுமதித்தால் கேடு விளையுமென்றும் அன்றே நினைத்தேன்... அதனால் மறுத்தேன்.

மந்திரி: பின்னர் நீங்கள் தானே அனுமதியளித்தீர்கள் மன்னா!

மன்னன்: உண்மைதான் மந்திரியாரே! இதுவரை எந்தவொரு விடயத்திலும் எனது கருத்துக்கு மாற்றுக் கருத்து யாரும் சொன்னதில்லை சொல்லத் துணிந்ததுமில்லை. அது உங்களுக்கும் தெரியும் நான் சொன்னால் சொன்னது தான். அவ்வளவிற்கு நான் சரியாகச் சொல்வேன். நிறைவாகவே சிந்திப்பேன் அன்று இராஜசபையிலே நீங்கள் அப்பறங்கியருக்காக இரு முறைகள் பரிந்து பேசி அனுமதியளிக்கும்படி கேட்டு நின்றீர் நீ தாங்கள் மந்திரியென்பதால் அல்ல என் அண்ணன் என்பதால் பிரதானிகள், தளபதிகள், மதாக்கர்கள், பஞ்சாயத்தார் பலரும் குழுமியிருந்த இராஜசபையில் தங்களின் வார்த்தைக்கு உரிய மதிப்பளித்துக் கௌரவிக்க வேண்டுமென்ற ஒரே காரணத்தினால், சகோதர வாஞ்சையால் முதலில் மறுத்து நின்ற நான் பின்னர் அனுமதி வழங்கினேன் அதைவிட அப்பறங்கியருக்கு அனுமதியளிக்க என்னிடம் வேறெந்தக் காரணமும் இருக்கவில்லை. அதாவது தங்களின் பரிந்துரையின் நிமித்தமே அனுமதி வழங்கினேன். அல்லாமல் என் சிந்தனையொன்றும் கெட்டு குடிமுழுகிப் போய்விடவில்லை.

மேலும் களிக் கோட்டையிலும், கோட்

(7 ஆம் பக்கம் பார்க்க)

**பறங்கியரின் களிமண் கோட்டை மீது படைகொண்டு மோதிய நல்லூர் அரசு (நான்கு)**

---

இனப்பிரச்சினைத் தீர்வு:

# ஒற்றை ஆட்சி முறையை நிலைநிறுத்தும் அவசியம் இல்லை

இராணுவ, தீவிரவாத வன்செயல்கள் முதலியவற்றுக்கு எதிராக, நாகரிக மக்களுக்கு ஏற்றதாக பேச்சுக்கள் மூலம் காணப்படுவதான கருத்து உடன்பாடு ஒன்றை உருவாக்குவதே சத்யோதய இயக்கத்தின் நோக்கம்.

எப்படியான தீர்வு காணப்பட வேண்டும்?

தீவிரவாதம் நோயல்ல; நோயின் அறிகுறியே.

**ஈழம் கோரிக்கை**

தமிழ் மக்களின் குறைகளைத் தீர்க்கத் தவறிய தன் காரணத்தினால் தான் ஈழம் கோரிக்கை எழுந்தது.

இப்பிரச்சினைகளுக்குத் தற்போதைய அரசாங்கம் தனது 1977 தேர்தல் விஞ்ஞாபனத்திலும், நாடாளுமன்றத்தில் நிகழ்த்தப்பட்ட அரச கொள்கைப் பிரகடனத்திலும் பதில் கொடுத்திருந்தது.

அப்பதில் வருமாறு: "தமிழ் பேசும் மக்களுக்கு பல பிரச்சினைகள் உள்ளன என்ற நிலையை எனது அரசு ஏற்றுக்கொள்கிறது

இப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணத் தவறியதே தனிநாடு கோரும் இயக்கத்தை ஆதரிக்கத் தமிழ் மக்களைத் தூண்டிவிட்டது

தேசிய ஒருமைப்பாடு, ஐக்கியம், பொருளாதார அபிவிருத்தி ஆகியவற்றின் நலன் கருதி தமிழ் பேசும் மக்களின் பிரச்சினைகளுக்குக் காலதாமதம் இன்றி தீர்வு காணப்படவேண்டும் என்று அரசாங்கம் உணர்கிறது.''

ஆகவே இன்றைய பிரச்சினைகளுக்கு முக்கிய காரணம் வன்செயல்கள் அல்ல என்பது இதில் இருந்து புலனாகின்றது தனிநாடு கோருவதும் பிரச்சினைகளுக்கான காரணமும் அல்ல.

தமிழரின் குறைபாடுகளுக்கு பரிகாரம் காணுவதில் ஏற்பட்ட பிரச்சினைகள்தான் தனிநாடு கோரிக்கை, வன்செயல்களுக்கு காரணமாக அமைந்தன

**தானே தணியும்**

குறைகளைக் களைந்தெறியும் தீர்வு காணப்பட்டால் தனிநாட்டுக் கோரிக்கையும் வன்செயல்களும் தானே தணிந்து விடும்

காலத்தை பெருமளவு விரயம் செய்து விட்டோம். மக்கள் ஏராளமாக உயிரிழந்து விட்டனர் சமூக பொருளாதார முன்னேற்றங்கள் தடைப்பட்டுள்ளன.

## சரியான சமாதானத் தீர்வு கோருகிறது 'சத்யோதய'

பொது மனிதத் தன்மைக்காக சகலரும் பாடுபடவேண்டிய காலம் இது. தற்போதைய பேச்சுக்களில் மூன்று முக்கிய அம்சங்களை சத்யோதய அமைப்பு வலியுறுத்த விரும்புகிறது.

முதலாவது, தோட்டப் பகுதி மக்கள் பற்றியது.

> சமஷ்டி அமைப்பு நாட்டின் ஒற்றுமைக்கு எதிரானது அல்ல.
> இத் தலைப்பில் சத்யோதய அமைப்பு விடுத்த அறிக்கை இன்று பிரசுரமாகின்றது.
> அமைப்பின் இணைப்பாளர் போல் கஸ்பர்ஸ், துணை இணைப்பாளர் லலித் அபயசிங்க ஆகியோர் இணைந்து அறிக்கையை வெளியிட்டுள்ளனர்

தற்போதைய பிரச்சினையில் தோட்டத் தொழிலாளரின் பங்கு முக்கியமானது.

வடக்கு, கிழக்கு பகுதிகளுக்கு வெளியே தோட்டத் தொழிலாளர் பெருந்தொகையாக வாழ்வது பிரிவினை கோரும் பிரிவினைவாதிகளை சிந்திக்க வைக்கும்

வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்களின் குறைபாடுகளுக்குச் சரியான பரிகாரம் காணத் தவறுவது தோட்டப்பகுதிகளுக்கும் வன்செயல்களை அழைப்பதில் தான் முடியும்

தோட்ட மக்களின் அபிலாஷைகளையும் கவனத்துக்கு எடுத்துச் செயல்படுமாறு பிரிவினைவாதிகளையும் பிரிவினைக்கு எதிரானவர்களையும் நாம் வேண்டுகின்றோம்.

கடந்த 150 ஆண்டுகளாக தோட்டத் தொழிலாளர் நாட்டுக்கு சேவை புரிந்து வருகிறார்கள்

நாட்டை ஒற்றுமைப் படுத்துவதிலும் அவர்கள் முக்கிய உதவி அளிக்க முடியும்

**தோட்டத் தொழிலாளர்**

தேசிய நீரோட்டத்தில் தோட்டத் தொழிலாளருக்கு உரிய இடத்தை அளிப்பது, நிரந்தரத் தீர்வையும் சமாதானத்தையும் காண உதவும்.

அதிகாரப் பகிர்வு சம்பந்தமாக எடுக்கப்படும் முடிவுகளை அமுல் நடத்துவது பற்றி அதிகாரத்திலுள்ளவர்களின் கவலையும் முக்கிய அம்சமாக விளங்குகின்றது.

குறைபாடுகளைக் களைந்தெறிவதற்கான தீர்வுகள், அதே உணர்வுடன் செயல்படுத்தப்படவேண்டும் தீர்வுகளை பாரபட்சமின்றி, பயமின்றி துணிந்து செயல்படுத்தக்கூடிய அமைப்பு ஒன்று அவசியம் தேவை.

**தெளிவான விளக்கம் தேவை**

நாட்டின் ஐக்கியம், அரசாங்க அமைப்பு ஆகியன பற்றி தெளிவான விளக்கம் தேவை. நாட்டு ஒற்றுமையை நிலை நாட்டவேண்டும் என்பதில் காட்டப்படும் உறுதி, பலனளிக்கக் கூடியதான அதிகாரப் பகிர்வுகளை மாகாண அல்லது பிராந்தியசபைகளுக்கு வழங்குவதற்கு தடையாக இருக்கக் கூடாது.

ஐக்கியமான நாடு ஒன்றையே நாம் விரும்ப வேண்டும். ஆனால் அது ஒற்றையாட்சி கொண்ட நாட்டுக்கான விருப்பாக இருக்கக் கூடாது.

சமஷ்டி அரசமைப்பின் கீழும் ஐக்கியமான நாடு ஒன்று இருக்கமுடியும் என்பதை நாம் முக்கியமாகத் தெரிந்து கொள்ள வேண்டும்.

**எது எதிரி?**

சமஷ்டி, நாட்டின் ஒற்றுமைக்கு எதிரானது அல்ல. ஒற்றுமையின்மை தான் நாட்டின் ஒற்றுமைக்கு எதிரி.

எமது காலத்தில் நிலவும் இனப்பிரச்சினைக்கு கௌரவமான அமைதித் தீர்வு காணப்படவேண்டும்.

கடந்த காலங்களில் இடம் பெற்ற நியாய மற்ற அரசியல் விளையாட்டுக்களை நாம் மறந்துவிட வேண்டும். நாம் பிறந்த மண்ணைக் காப்பாற்ற அவை மறக்கப்பட்டாக வேண்டும் நீதியான, கௌரவமான தீர்வு ஒன்றைக் காணுவதற்கு இப்பேச்சுகள் உதவவேண்டும். நேர்மையான, உண்மையான உணர்வுகளுடன் சகல இன மக்களையும் பாதுகாக்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும்.

**சத்யோதய அமைப்பின் வேண்டுகோள்**

சத்யோதய அமைப்பு நாட்டு மக்களுக்கு விடுக்கும் வேண்டுகோள் இதுவாகும்.

1977 சன்சோனி ஆணைக்குழுவின் அறிக்கையில் சத்யோதய அமைப்பைச் சேர்ந்த ஒருவரின் கூற்றை ஆணையாளர் திரு. சன்சோனி சுட்டிக்காட்டியிருந்தார்.

அதையே நாமும் கீழே தருகின்றோம்:

"உண்மையான சோஷலிச சமூகம் ஒன்றை நிறுவுவதன் மூலம்தான், இனங்களுக்கு இடையே

(7ஆம் பக்கம் பார்க்க)

---

# யுத்த காலத்தில் பத்திரிகைகளில் நாளுக்கொரு புதுத்தமிழ் வெடிக்கும்

## மூத்த பத்திரிகையாளர் - எழுத்தாளர் அ. செ. மு. கூறும் அனுபவ மொழி

அ. செ. மு.

இந்த மூன்று எழுத்துக்களில் மறைந்திருக்கும் திரு. அ. செ. முருகானந்தன் அவர்களைத் தெரியாத தமிழ்ப் பத்திரிகையாளர்கள், தமிழ் எழுத்தாளர்கள், இலக்கிய ரசிகர்கள் ஈழத்தில் இருக்க முடியாது.

ஆழ்ந்த சிந்தனையும், நறுக்குத் தெறித்தாற் போன்ற தனிப் பாங்கான தமிழ் நடையும், சமூகக் கொடுமைகளை ஓங்கி அறையும் பணியும் அவரது எழுத்துக்களில் பிரதிபலிக்கும்.

மணிக்கொடி - மறுமலர்ச்சி காலத்தின் இலக்கிய இளவல்களில் ஒருவராகத் திகழ்ந்தவர் திரு அ. செ மு

ஈழகேசரி, வீரகேசரி, ஈழநாடு ஆகிய பத்திரிகைகளில் பணியாற்றியவர்.

ஒரு காலத்தில் கொடிகட்டிப் பறந்த அவரது புகழ் இன்று மறந்து போன கதையாகி விட்டது.

மூப்பும், பிணியும், ஏழ்மையும் சேர்ந்து வாட்ட அவரது வாழ்க்கைப்படகு இப்போது ஓடிக்கொண்டிருக்கிறது.

அவரது சிறுகதைகள் அடங்கிய தொகுதி ஒன்றை வெளியிட யாழ் மாவட்ட கலாசார மன்றம் ஏற்பாடுகள் செய்துள்ளது.

அளவெட்டியில் அவரது இல்லத்தில் அவரைச் சந்தித்தபோது அவர் தனது நினைவலைகளை சஞ்சீவி வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள முன்வந்தார்:

ஈழகேசரி ஒன்றுதான் தரமானதொரு இலக்கிய ஏடாக வெளிவந்து கொண்டிருந்த காலம். பத்திரிகைத் தொழிற் பயிற்சிக்கென வகுப்போ, பாடசாலையோ இல்லாத காலம். அப்போது, இராமநாதன் கல்லூரி மாணவி ஒருத்தி "பத்திரிகை மாமா எனக்குப் பத்திரிகைத் தொழில் கற்றுக்கொள்ள நிரம்ப ஆசையாயிருக்கு அது எப்படி சாத்தியப்படும் சொல்லுங்கோ?'' என்று எழுதியிருந்தார் அந்தக் காலத்தில் அப்படி வாய்ப்புக்கள் இல்லை. ஆனால் இன்று அவ்வாறு நாட்டம் உள்ள இளையவர்களுக்கு யாழ்ப்பாணத்தில் மூன்று தினசரிகள் வெளிவருவதால் நிறைய வாய்ப்புண்டு. ஈழகேசரியில் சிறுவர் பகுதிக்கு வரும் கடிதங்கள் பலவிதம். தமாஷ் பண்ணுவார்கள் குறும்பும் பண்ணுவார்கள். "படிப்பதற்கு நல்ல புத்தகங்களின் லிஸ்ட் கொடுங்கள்'' என்பான் ஒருத்தி. "ஐயோ, எவ்வளவு ரோஜா மலர்கள் எங்கள் தோட்டத்திலே. ஒன்றை அனுப்பி வைக்கட்டுமா? ஆனால் உங்களிடம் சேருவதற்குள் வாடிவிடுமே''— இப்படிக் கவலை தெரிவிப்பாள் இன்னொருத்தி.

திருகோணமலையில் வாழ்ந்த காலத்தில் "எரிமலை'' என்று ஒரு சொந்தப் பத்திரிகை நடத்தினேன் கல்கி ஆசிரியரின்

### நினைவலை

நல்லாசியுடன் தொடங்கிய இப்பத்திரிகை, நீடித்து நிலைக்காமல் அற்ப ஆயுள் சங்கதியாக முடிந்து விட்டது. இக்காலத்தில் மூத்த தமிழ் பத்திரிகையாளர் திரு எஸ். டி. சிவநாயகத்துடன் ஏற்பட்ட அறிமுகம் பலவகையிலும் பயனுள்ளதாக அமைந்தது அவருடன் நான் தமிழகம் பயணஞ் செய்தேன் பின்னர் அங்கு நீண்ட காலம் தங்கிப் பத்திரிகைத் துறையில் பலவகை அனுபவங்களைப் பெறமுடிந்தது.

கல்கியார் இலங்கைக்கு விஜயஞ் செய்தபோது கொழும்பில் நான் தொழில் செய்த பத்திரிகைக் காரியாலயத்துக்கு என்னைத் தேடி வந்தார். நேசபாவம் ததும்ப என் கரம்பற்றி, "எரிமலை'' பத்திரிகை பற்றி விசாரித்தார். நெடுநாள் பழகிய அன்

(7 ஆம் பக்கம் பார்க்க)

## விடிவு எங்கிருந்து எத்திசையாக வருமோ?

[உதயன், சஞ்சீவி பத்திரிகைகளை வெளியிடுவதற்கான ஆயத்தங்களைச் செய்தகாலை, அண்ணர் அ. செ. மு அவர்களின் எழுத்துப் பணிக்கு புத்துயிர் கொடுக்கும் ஆர்வத்துடன் அவரிடமிருந்து ஆக்கங்கள் கேட்டு எழுதிய கடிதத்திற்கு அவர் அனுப்பிய பதில் இது. அவரது பேட்டியுடன் இதனை வெளியிடுவது பொருத்தம் எனக்கருதி இங்கு பிரசுரிக்கின்றோம் அவரது கடிதமே ஓர் இலக்கிய வடிவமாக, இருப்பதை வாசகர்கள் அவதானிக்கலாம்.

—பிரதம ஆசிரியர்]

அன்புக்கினிய...

கடிதங்கள் பார்த்து மகிழ்ந்தேன். நும் புது முயற்சி வெல்க வாழ்க என்று வாழ்த்துகிறேன். 'சஞ்சீவி' இதழுக்கு எழுதும்படி கேட்டிருக்கிறீர்கள் பாதாதி கேசமாய் சுகவீனமுற்றிருக்கிறேன். அத்துடன், நாளதுவரை என் ஆயுள்பூரா பற்றிப் படர ஒரே கொழுகொம்பாக - உற்ற துணையாக, மனை விளக்கும் மணிமகுட தீபமுமாக சுடர்விட்டு மிளிர்ந்த அன்னையாரை சில மாதங்கள் முன்னதாகத்தான் இழந்து இராப் பகல் நெஞ்சங்கலங்கி அலைமோதும் மனச்சஞ்சலம், பிரிவாற்றாமை.

நினைவிருக்கிறதா, அறுபத்து மூன்றோ நான்கோ ஆண்டு டிசம்பர் கடைசியில் நம் குடா நாட்டையும் வடபால் சமுத்திரத்தையும் ஒரு கலக்கு கலக்கிவைத்து விட்டு ஓடி மறைந்த அந்தப் பொல்லாப்புயல் மழை? ஈழநாடு பத்திரிகை நிறுவனத்தில் ஹரன் ஐயா கூட நாமெல்லாம் ஒன்றாகப் பணிபுரிந்த நாட்கள். யாழ் நகரில் ஒரு வீட்டில் ஒடுக்கமானதொரு ஒதுக்கத்தில் சொற்ப வாடகைக்குக் கிடைத்த குடியிருப்பு. அதிலே என் வயோதிப அன்னையார் கூட எப்படியோ மடங்கி முடங்கி வாழ்ந்தார். அச்சாபீஸில் ஹரன் ஐயாவிடமும் மெத்த [illegible]புள்ள பக்தியாக [illegible] சில ஆண்டுகள் [illegible] மலரில் பணி ஆற்றினேன் அல்லவா?

வங்கக் கடல் கொந்தளித்தெழுந்து நம்மேல் சீறிப்பாய்ந்து ஊரெங்கும் பெரும் அக்கிரமம் பண்ணிவிட்டிருந்த அந்த ஓரிரு தினங்கள் - நானோ அதுநான் ஒருமாதமாக கடுமையாக நோய்வாய்ப்பட்டு படுக்கையில் கிடந்து உழன்றவன். டாக்டர் சண்முகரத்தினத்தாரின் கருணைமிகு மருத்துவ சிகிச்சையிலும் வீட்டில் அன்னையாரின் இராப்பகல் ஓய்வற்ற பராமரிப்பிலும் பூரண குணமெய்தி புத்தெழுச்சி பெற்று அலுவலகப்பணி ஏற்க ஆயத்தமாக நின்றேன். புயல்காற்று நம் அலுவலக கூரை மீதும் விளையாடி அதனைப் பெயர்த்தெறிந்து எங்கோ கொண்டுபோய் வீசியிருந்ததனால் அண்ட வெளி ஆகாசவெளியாக இருந்து கிடந்த [illegible]



அ. செ. மு.

பரப்பி மறுதினம் பத்திரிகையை எப்படியும் நாள் நேரம் பிந்தாமல் வெளியிடும் முயற்சியில் கண்ணும் கருத்துமாய் ஈடுபட்டிருந்த நும்கூட நானும் சேர்ந்துகொண்டேன்.

அதே வெட்டவெளியினூடாகவே நான் மனோரதமேறி ஊரெங்கும் சுற்றிவந்து 'பொங்கியதோ வங்கம்' என்று தலைப்பிட்டு அன்றைக்கே [illegible] வார ஞாயிறு இதழுக்கு

(7 ஆம் பக்கம் பார்க்க)

---

## கடல் கடந்த கடிதம்

### கந்தன் கருணை

தம்பி,

நல்லூர்க் கந்தன் விழா நல்லபடியாக நடந்து வருவது பற்றி எழுதியிருந்த கடிதம் கிடைத்தது; மகிழ்ச்சி. அல்லற்பட்டு ஆற்றாது அழுது கண்ணீர் வடிக்கும் அடியார்களுக்கும் அகதிகளுக்கும் கந்தன் கருணை நிச்சயம் கிட்டும்!

கச்சியப்பர் பாடித் தந்தது கந்தபுராணம். கோயில்கள் தோறும் அந்தப் புராணத்தின் பயன் கேட்டுப் பயன்பெற்றவர்கள் நாம்! இன்று வீடுகள் தோறும் முருகன் அவதாரங்கள்—வீதிகள் தோறும் கந்தபுராணக் கதைதான்!

தேவர்கள் சூரபத்மன் ஆட்சியில் அல்லற்பட்டார்கள்; முருகன் என்ற இளையோன் தோன்றினான்! சூரன்மீது வேல்பாய்ந்தது! இக்காலத்தவர்களை விடத் தேவர்கள் புண்ணியவான்கள்! ஏன்? இக்காலக் கெடுபிடி வகைகளை—சித்திர வதைத் தொழில்நுட்பங்களை - சூரனின் ஆட்கள் அறிந்திருக்கவில்லை!

'வேலை வணங்குவது நமது வேலை!' என்கிறார்கள் முருகன் அடியார்கள். 'திருக்கைவேல் போற்றி! போற்றி!' என்று கந்தபுராணத்தையே பாடுகிறார்கள் முருகன் அவதாரங்கள்!

வெவ்வேறு உருவம் எடுக்க வல்லவன் வேலவன் வனத்திலே வேடனாக, வேங்கை மரமாக, விருத்தனாக வேற்படைவீரன் உலாவி வந்ததை. தம்பி, நீ கந்தபுராணத்திற் கற்கவில்லையா?

ஆறுதலை அடைய ஆறுதலையை வணங்குகிறார்கள் அடியார்கள்! தம்பி, ஆறுமுகம் ஆன பொருள் நீ அறிவாயா? 'சிலருக்கு' ஒரு முகப் பொருள் தெளிவாகத் தெரிகிறது! எந்த முகம்? மாறுபடு சூரனை வதைத்த முகம்!

கூறுமடியார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்று! இது இன்னும் தெளிவாகத் தெரியவேண்டும் - அறிவாளர்கள் துணையோடு துலக்கமாகத் தெரியவேண்டும்!

'வீரவேல்! வெற்றிவேல்!' என்ற முழக்கம் ஓய்ந்ததும் வேலை இல்லையே என்று தம்பி வேதனை வேண்டாம்! ஞான வேலை வணங்கி செய்யும் ஆக்கவேலையுண்டு! கந்தன் கருணை இன்றும் பொழியும்; என்றும் பொழியும்!

அன்புடன்
—சிவா—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியத்தகு 'மின்'னின் வியப்பான சேவை

நாம் இக்காலத்தில் வாழும் நவநாகரிக வாழ்க்கையின் ஒவ்வொரு பகுதியிலும் மின்சாரம் பின்னிக்கிடக்கிறது. நமது வீடுகளில் அது விளக்கேற்றுகிறது; விசிறி வீசுகிறது; மணி அடிக்கிறது; நீர் இறைக்கிறது; வெந்நீர் போடுகிறது; அறைகளைத் துலக்கிச் சுத்தமாக்கிறது; துணிகளுக்கு அழுத்தம் போடுகிறது; கிராம போனையும் தையல் இயந்திரத்தையும் சுழற்றுகிறது; நெல்லைக் குத்துகிறது; தானியங்களையும் மிளகாயையும் அரைக்கிறது; கோப்பிக்கொட்டையை வறுத்துத் தூளாக்கித் தருகிறது; வானொலிப் பெட்டியை ஒலிக்கச் செய்து நாடு முழுவதிலும் நடக்கும் செய்திகளை நமக்கு உணர்த்துகின்றது; கீழிருந்து மாடிக்குக் கொண்டு போய் விடுகிறது; இவ்வாறு அது செய்துவரும் செயல்களுக்கு கணக்கே இல்லை.

நகர வாழ்விலே இவ்வாறு உதவி செய்யும் மின்சாரம் கிராம வாழ்க்கையிலும் மிகவும் உதவி செய்யக் கூடியதாக இருக்கிறது. ஆயினும், நமது நாட்டிலே நாம் அதை இன்னும் அத்தனை அளவாக பயன்படுத்திக் கொள்ளவில்லை. மேலைத்தேய நாட்டாரோ, அதைக் கொண்டு பற்பல காரியங்களைச் செய்து வருகிறார்கள். உழுதல், விதை விதைத்தல், விதையை முளைக்கத் தூண்டல், நிலத்துக்குத் தண்ணீர் இறைத்தல், கதிர் அறுத்துச் சூடடித்தல் முதலிய வேலைகளுக்கெல்லாம் மின்சாரம் அங்கே உதவுகிறது. நமது நாட்டிலும் இவ்வகைக் காரியங்களில் மின்சாரத்தைச் சிறிது சிறிதாக மேன்மேலும் பயன்படுத்த முயன்று வருகிறார்கள்.

இப்போது நமது நாட்டிலே கிராமங்களிலுங்கூட, வீடுகளுக்கும், கடைகளுக்கும் கோழிகூடுகள் மாட்டுக் கொட்டில்கள் முதலியவற்றுக்கும், தெருக்களுக்கும், கல்யாணங்களுக்கும் வாரச் சந்தைகளுக்கும் அவ்வப்போது கிராமங்களுக்கு வரும் நாடகங்களுக்கும் சினிமாக்களுக்கும் விளக்கேற்ற அதை உபயோகிக்கத் தொடங்கிவிட்டார்கள். கிராம வாழ்விற்கு ஏற்ற சின்னஞ்சிறு இயந்திரசாலையிலுள்ள இயந்திரங்களை ஓட்டுதல் முதலிய பல காரியங்களில் மின்சாரம் மேன்மேலும் பயன்பட்டு வருகிறது. இவ்வாறு பயன்படுவதற்கு வேண்டிய சௌகரியங்களை எல்லாம் அரசாங்கத்தார் செய்து வருகிறார்கள்.

இப்பொழுது, ஏதாவதொரு காரணத்தால் மின்சாரம் திடீரென்று நின்று விட்டால் நமக்கு எத்தனை சௌகரியங்கள் குறைந்து போகும்! வாழ்க்கையே துன்பமாகி விடும் என்று கூடத் தோன்றுகிறது.

மின்சாரம் உபயோகத்துக்கு வரத்தொடங்கி சுமார் நூற்றைம்பது வருடங்களே ஆகின்றன. அக்காலத்துக்கு முன்னும் மின்சாரம் இல்லாமலில்லை; ஆனால் அதன் இயல்பையும் ஆற்றலையும் மக்கள் தெரிந்து கொள்ளவில்லை. தம்முடைய குற்றேவல்களையெல்லாம் செய்யவல்ல பணியாளாக அதை வசமாக்கிக் கொள்ளவில்லை. இப்பொழுதோ, மின்சாரத்தின் தத்துவங்களை ஆராய்வதில் ஈடுபட்ட விஞ்ஞானிகளின் ஊக்கத்தாலும் மதிநுட்பத்தாலும் இதை ஒட்டிய அறிவு மேன்மேலும் பெருகிக் கொண்டே வருகிறது.

(அடுத்த வாரம் முடியும்)

செல்வன் ப காண்டீபன்,
(மானிப்பாய் இந்துக் கல்லூரி)



## கற்கும் வழி சொல்லும்

உணவு ஊட்டும் வேளையிலே
உதிக்கும் நிலவை எனக்குகாட்டி
இன்பமுடன் பாடுகின்றாய் அம்மா-உன்
இசைக்கு மதியும் வந்திடுமோ சும்மா.

நிலவில் முயல் தெரியுதென்பாய்
நிமிர்ந்து பார்க்க ஊட்டிடுவாய்
பலரும் சொன்ன பொய் இதுதான்
அம்மா - இப்போ
பார்க்க எல்லாம் விளங்கிடுதே சும்மா-

நிலவில் ஔவை இருக்குதென்பாய்
நிமிர உணவை வாயில் வைப்பாய்
குலவி நீயும் சொன்னதெல்லாம் சும்மா-
மதியில்
குடியிருப்பாளோ ஔவை அம்மா.

அமெரிக்கரும் நிலவு சென்றார்
அடுத்து ரஷ்யர் தானும் சென்றார்
எமக்கு ஏனோ மதியை அழைக்கும் வேலை-
தாயே
இப்படியே கெட்ட தெங்கள் மூளை.

ஔவை முயல் சந்திரனில்
அம்மா நீயும் காட்டவேண்டாம்
செவ்வையாக நிலவினுக்கே செல்லும்-
அறிவு
சீக்கிரமாய் கற்கும் வழி சொல்லும்.

லலிதலட்சுமி தெய்வேந்திரா
(வேம்படி மகளிர் கல்லூரி)

## தெரியுமா உங்களுக்கு?

● உலகின் மிகப் பெரிய அற்லஸ் ஜேர்மன் தலைநகரான பேர்லின் நகரிலுள்ள நூலகத்தில் உள்ளது. இது 59 அடி நீளமும் 35 அடி அகலமும் கொண்டது. நிறை 195 கிலோவாகும்.

● சிறுவர்க்கு மிகப் பிடித்தமானதில் சர்க்கஸும் ஒன்று. இது முதலில் ரஷ்யாவிலேயே ஆரம்பிக்கப்பட்டது இப்பொழுது அங்கு 69 சர்க்கஸ்கள் உள்ளன.

● உலகின் மிகப் பெரியதும் கூடுதலான புத்தகங்களும் உள்ள நூலகம் மாஸ்கோவில் உள்ளது.

—தி தவபாலன்

சீர்கெட்ட சீதனப் பிரச்சினை

# பெண்கள்மீது பழி சுமத்துவது முழுக்க முழுக்க அபத்தமானது

சீர்கெட்ட சீதனப் பிரச்சினைக்கு பெண்களேதான் முழுப் பொறுப்பு என்று கலைச்செல்வி தியாகராஜாவால் எழுதப்பட்ட சீதனப் பிரச்சினை பற்றிய கட்டுரை ஒன்று 16.8.86 சஞ்சீவி இதழில் பிரசுரமாகி இருந்தது. முரண்பாடான கருத்துக்களை கட்டுரையில் முன் வைத்துள்ளதை இங்கு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கல்யாணச் சந்தையிலே இன்று ஏல விற்பனைக்கு கடைச் சரக்குப் பொருளாக முற்று முழுதாக ஆண்கள் மாற்றப்பட்டுள்ளார்கள் என்பதனை நான் வருத்தத்துடன் கூறிவைக்க விரும்புகின்றேன். இதற்குப் பெண்தான் முற்று முழுதாகப் பொறுப்பு இல்லை. ஆண்கள்தான் முழுக்க முழுக்க காரண கர்த்தாவாக இருக்கின்றார்கள்.

கலைச்செல்வி தியாகராஜாவின் விமர்சனத்தில் சில கேள்விகள் எழுப்பப்பட்டிருக்கின்றன. அவை ஒவ்வொன்றுக்கும் நான் பதில் அளிக்க விரும்புகின்றேன்.

ஒரு பட்டதாரி ஆசிரியை ஏன் ஒரு விவசாயிக்கு கழுத்து நீட்டக் கூடாது என்று நீங்கள் நினைக்கின்றீர்கள் படித்த பெண்கள் அல்லது பதவிவகிக்கும் பெண்கள்படித்தவாலிபனையோ அல்லது பதவி வகிக்கும் வாலிபனைத் தான் திருமணம் செய்கின்றார்கள் என்று. தங்களின் எண்ணம் பிழையானதாகும்.

பட்டதாரி ஆசிரியை மட்டுமல்ல எத்தனையோ உயர் பதவி வகிக்கும் பெண்கள் வேலையற்ற ஆடவர்களைத் திருமணம் செய்யவில்லையா? ஒரு சிலரை மையமாகக் கொண்டு பெண்குலத்தின் மேல் குற்றத்தைச் சுமத்துவது மிகவும் பிழையானதாகும். இன்று இலங்கையில் கல்வி கற்போர் சனத்தொகையில் 56 விதமானோர் பெண்களே. உத்தியோகம் வகிக்கும் பெண்கள் சிலர் விவசாயியைத் திருமணம் செய்து இருக்கின்றார்கள். எனவே சமூகத்தை முற்றுமுழுதாக அவதானியுங்கள்.

அடுத்த உங்களது இரண்டாவது கேள்வியை நோக்குகின்றேன். ஏல விற்பனைப் பொருள் போல வெளிநாட்டு மாப்பிள்ளைகளுக்கு போட்டி அடிப்படையில் சீதனத்தைக் கொடுத்து பெண்கள் கழுத்தில் மூன்று முடிச்சு ஏற்றி விடுகின்றனர் என்பதாகும். ஏன் திருமணம் செய்துகொள்ளும் ஒன்றும் அறியாத அப்பாவிப் பெண்ணின் மீது குற்றத்தைச் சுமத்துகின்றீர்கள். பெண்ணைப் பெற்ற தகப்பன் அதாவது குடும்பத்தின் தலைவன் தான் சீதனத்தைக் கொடுத்து தன் மகளை வாழவைக்க விரும்புகின்றான் இந்த இடத்தில் யார் குற்றவாளி?

மூன்றாவதாக பெண்ணுக்கு பதவி மோகம் ஆட்கொள்கின்றது என்பதாகும். அதாவது தங்களது கருத்து பெண் ஒருத்தியின் சகோதரன் வெளிநாடு சென்று பணம் சம்பாதிக்கின்றான் என்பதால் சகோதரியான பெண்ணுக்கு பதவி மோகம் ஏற்பட்டு விடுகிறது என்பதேயாகும். முடியுமானால் அந்த வெளிநாட்டு மாப்பிள்ளையை சீதனம் இல்லாமல் படிப்புக்குறைந்த பெண் ஒருத்திக்கு தாலி கட்டும்படி கூறுங்கள். அவர் என்ன சொல்வார், என்ன செய்வார்.

ஓர் ஆணைப் படிக்க வைத்து பதவிக்கும் பெற்றோர் வழிகாட்டி விடுகின்றனர். இதனால் பெருந்தொகையான செலவும் ஏற்படுகின்றது. உண்மைதான். அதற்காகத்தான் செலவுத் தொகையும் கேட்கின்றார்கள். இதுவும் உண்மைதான். சற்று சிந்தித்துப் பாருங்கள். படித்து பதவி வகிக்கும் ஒரு பெண்ணுக்கு இதே செலவு தான் ஏற்பட்டிருக்கும் ஏன் அவளுக்கு செலவுத்தொகை கேட்பதில்லை. ஆணுக்கொரு நீதி. பெண்ணுக்கொரு நீதியா?

அடுத்து பெண் ஒருத்தி தனது கணவன் முற்று முழுதாக தனக்கே சொந்தம் என்ற நிலையில்தான் இருப்பாள். இதே போன்று தான் தன் மனைவி தனக்கு மட்டும் தான் சொந்தம் என்ற நிலையில் ஆண்மகன் இருப்பான். இதனால்

(6 ஆம் பக்கம் பார்க்க)

புஷ்பா இராசையா

## அரிவையருக்கு சில அறிவுரைகள்

✱ ஒரு பெண்ணுக்கு உள்ளத்தில் அன்பு வேண்டும். ஆனால் அந்த அன்பைக் கொண்டே பிறரைத் தப்பான எண்ணத்தோடு தன் வலைக்குள் இழுத்துப் போடும் தன்மை இருக்கக்கூடாது.

✱ அறிவு வேண்டும். ஆனால் தன் அறிவிற்கு முன்னால் அனைவரும் சுத்தமடையர் என்ற எண்ணம் இருக்கக் கூடாது.

✱ அழகு வேண்டும். ஆனால் அது ஆணவத்தை வளர்ந்து விடக் கூடாது.

✱ நாகரிகமாக நடக்கலாம் ஆனால் பிறர் குறை கூறுமளவுக்கு அது மாறி விடக் கூடாது.

✱ பொன்நகை வேண்டும். அதற்கு மேலாகப் புன்னகை வேண்டும்.

✱ துணிவு வேண்டும். ஆனால் கணவனை ஆட்டிப் படைக்கும் அளவுக்கு அது மாறக் கூடாது.

✱ ஆண்களோடு சகஜமாகபழகலாம்தவறில்லை. ஆனால் உள்ளத்தில் தூய்மை வேண்டும்.

✱ வாழ்வில் சிக்கனம் தேவைதான். ஆனால் கருமி என்ற பட்டத்தைப் பெற்றுவிடக் கூடாது.

✱ சிரித்து வாழ வேண்டும். ஆனால் பிறர் சிரிக்க வாழக் கூடாது.

தொகுப்பு:-
ஜெயா ஞானசுந்தரம்





# நீண்ட இடைவெளிக்குப் பின் மீண்டும் பானுமதி நடிக்கிறார்!

## அத்துடன் பாட்டும் பாடுகிறார்!!

திரையுலகை விட்டு விலகி இருந்த நடிகை பானுமதி நீண்ட இடைவெளிக்குப் பின் மீண்டும் நடிக்க வந்துள்ளார்.

'கண்ணுக்கு மை எழுது' என்ற படத்தில் முக்கிய வேடத்தில் அவர் நடிக்கிறார். அது மட்டுமன்றி, சொந்த குரலில் இரண்டு பாட்டும் பாடியுள்ளார். பானுமதியை மீண்டும் நடிக்கச் சம்மதிக்க வைத்தவர் தயாரிப்பாளர் கே. எல். போஸ்.

தயாரிப்பாளர் போஸ் அது குறித்துக் கூறுகையில்,

'கண்ணுக்கு மை எழுது' படத்தில் ஒரு முக்கியமான பாத்திரம். அதை ஒரு வித்தியாசமான நடிகை நடித்தால் நன்றாக இருக்கும் என்று டைரக்டர் மகேந்திரன் சொன்னார்.

நான் யாரை நடிக்க வைக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தபோது, 'பெரிய நடிகையாக இருந்தால் நல்லது' என்று மகேந்திரன் சொன்னார்.

நான் உடனே தெரிவு செய்தது பானுமதியைத் தான்.

பிறகு நண்பர் ஒருவரின் உதவியுடன் அவரைச் சந்தித்து விஷயத்தைச் சொன்னேன். அவரும் சம்மதித்து விட்டார்.

'கதை ரொம்ப நல்லா இருக்கிறது கதாபாத்திரமும் என்னை மக்களுக்கு மீண்டும் நினைவுபடுத்துவதாக உள்ளது. மகேந்திரனும் 'ஒரு நல்ல டைரக்டர். அதனால் உங்க படத்தில் நடிக்கிறேன்' என்று அவர் சொன்னதும் எனக்கு ஒரே ஆச்சரியம்!' என்றார்.

## கதை எழுதும் நட்சத்திரங்கள்

சில நடிகர்கள் நடிக்கப் போதிய வாய்ப்புக் கிடைக்காததால் கதை எழுத ஆரம்பித்து விட்டார்கள்.

சிவசந்திரன்— 'அன்னை என் தெய்வம்' 'சங்கர் குரு' ஆகிய படங்களுக்குக் கதை எழுதுகிறார்.

பிரதாப் — 'சொல்லத் துடிக்குது மனசு' என்ற படத்துக்கு கதை எழுதிக் கொண்டிருக்கிறார்



## நளினி - ராமராஜன் திருமணம் நடக்குமா?

இரண்டொரு மாதங்களுக்கு முன்னர் நளினி டைரக்டர் ராமராஜன் காதல் விவகாரம் பற்றி திரையுலகில் பரபரப்பாகப் பேசப்பட்டது.

இந்த காதலுக்கு நளினியின் பெற்றோர் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

"நளினியை ஒரு பிச்சைக்காரனுக்குக் கொடுத்தாலும் கொடுப்பேன். ராமராஜனுக்குக் கொடுக்க மாட்டேன்"—இப்படி நளினியின் தாயார் கூறி வந்தார்.

ஆனால் நளினியோ, "நான் ராமராஜனைத் தான் திருமணம் செய்து கொள்வேன். எனது முடிவில் எந்த மாற்றமும் இல்லை ஆனால் அதற்குக் கொஞ்சம் நாள் ஆகும்." என்று கூறியிருந்தார்.

ஆனல் இப்பொழுது நிலைமை மிகவும் மாறுதலாகத் தெரிகிறது.

நளினி, ராமராஜனை தனிமையில் சந்திப்பதை நிறுத்தி விட்டாராம்.

அதுமட்டுமல்லாமல் அவர் எதையோ இழந்ததைப் போன்று காணப்படுகிறார்.

அதேவேளை நளினி — ராமராஜன் திருமணம் நடக்காது என்று சினிமா வட்டாரங்களில் பேசப்படுகிறது.

## தாயின் அனுமதியின்றியே திரையுலகிற்கு வந்தார் சீதா!

'ஆண்பாவம்' புகழ் சீதா தாயாரின் அனுமதியின்றி நடிக்க வந்தவர்.

சீதா நடிக்க வந்த சமயத்தில், அவரின் தாயார் சந்திராவதி, யேமன் நாட்டில் தாதியாகப் பணிபுரிந்து கொண்டிருந்தார்.

ஒரு நாள் சந்திராவதிக்கு 'ஆண்பாவம்' படத்தைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அந்தப் படத்தைப் பார்த்துவிட்டு அவர் சீதாவுக்கு ஒரு கடிதம் எழுதினார்.

'அண்மையில் ஆண்பாவம்' என்ற படம் பார்த்தேன். அதில் நடித்திருக்கும் கதாநாயகி உன்னைப் போலவே இருக்கிறார்' என்று அதில் இருந்தது

அதன் பிறகு சீதா, 'ஆண்பாவம்' படத்தில் நடித்தது நான் தான், என்று கடிதம் எழுதினார்.

இப்பொழுது தாயார் சந்திராவதியிடம் இருந்து சீதாவுக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது.

'நீ நடிகையானது மிக்க மகிழ்ச்சி' என்று அதில் குறிப்பிட்டிருக்கிறாராம் அவர்.

## மீண்டும் மேனகா

தமிழ்ப் படவுலகை விட்டு ஒதுங்கி இருந்த நடிகை மேனகா மீண்டும் நடிக்கத் தொடங்கியுள்ளார். படத்தின் பெயர் "உனக்காகவே வாழ்கிறேன்".

இந்தப் படத்தில் சிவகுமாருக்கு ஜோடியாக இவர் நடிக்கிறார்.

## ● தயாரிப்பு: பேரின்பம் ●

## அமிதாப்பின் உதவி மறக்க முடியாதது

அமிதாப்பச்சன், ஸ்ரீதேவி, ஜெயப்ரதா ஆகியோர் நடித்துள்ள இந்திப்படம் 'ஆக்ரி ராஸ்தா'.

இந்தப் படத்தின் விசேஷம் என்ன? பாக்கியராஜ் திரைக்கதை அமைத்து இயக்கியுள்ளார் இந்தியில் பாக்கியராஜின் முதல் படம் இது.

இந்தப் படத்தைத் தொடர்ந்து இந்திப் படவுலகில் பாக்கியராஜுக்கு நல்ல மவுசு.

இப்பொழுது இந்திப் பட வாய்ப்புகள் அவருக்குக் குவியத் தொடங்கியுள்ளன. ஐந்து இந்திப் படங்களை அவர் டைரக்ட் செய்யவிருக்கிறார்.

'ஆக்ரி ராஸ்தா' படத்தைப் பற்றி பாக்கியராஜ் கூறுகையில்,

'ஆக்ரி ராஸ்தா' படத்தைத் தயாரிப்பாளர் பூர்ணசந்திரராவ் தயாரிக்க, சூப்பர் ஸ்டார் அமிதாப்பச்சன் நடிக்க, நான் இயக்குவது என்று முடிவு செய்தோம்.

அதற்குதேர்ந்தெடுத்த கதைதான்- 'ஒரு கைதியின் டைரி'.

எனது குருநாதர் பாரதிராஜா இயக்கி வெற்றிப் படமாக உருவாக்கிய ஒரு படத்தை இந்தியில் எடுக்கப் போகிறேன் என்ற பெருமை ஒரு புறம்.

அவரின் பெயர் கெடாமல் சிறப்பாகச் செய்ய வேண்டும் என்ற எண்ணம் மறுபுறம்.

அதனால் அதை நல்ல முறையில் செயல்படுத்த திட்டமிட்டேன். அதற்கு அமிதாப்பச்சன் பல வழி வழிகளிலும் உதவி செய்தார். அவர் செய்த உதவி மறக்க முடியாதது' என்றார்.

## கலைவாணரின் அந்தநாள் ஞாபகம் நெஞ்சிலே வந்ததே!

ஹாஸ்ய நடிகர்களில் மூத்தவரும் முன்னணியில் நின்றவருமான மறைந்த கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் நினைவு தினம் இன்று.

தமது துணைவியார் மதுரம் அவர்களுடன் இணைந்து மக்களை நகைச்சுவை மூலம் மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தியவர் கலைவாணர்

இன்றைய சிரிப்பு நடிகர்களின் முன்னோடியாக திகழ்ந்த அவர் ஒரு சீர்திருத்தவாதியும் ஆவார்.

தமது சீர்திருத்தக் கருத்துக்களை நகைச்சுவைமூலம் மக்கள் முன் வைத்து, அவர்களைச் சிரிக்கவும் சிந்திக்கவும் செய்தவர்.

சீர்திருத்தக் கருத்துக்களைப் பாடல் மூலம் இயற்றி தமது சொந்தக் குரலிலே பாடி மக்கள் மனதை கவர்ந்தவர்.

அன்று அவர் பாடிய 'நாகரிகக் கோமாளி வந்தானய்யா...' எனும் பாடல் இன்றைய மக்களையும் சிந்திக்கத் தூண்டுகிறது.

'ராஜாராணி' படத்தில் இடம்பெற்ற 'சிரிப்பு... அதன் சிறப்பை சீர்தூக்கிப் பார்ப்பதே எமது பொறுப்பு' எனும் பாடல் மூலம் இன்றும் எம்மை சிரிப்பில் ஆழ்த்துகிறார் கலைவாணர்.

அவரது சிறப்பை உணர்ந்த தென் இந்திய நடிகர் சங்கத்தினர்; தமது சங்கக் கட்டடத்தின் அரங்குக்கு 'கலைவாணர் அரங்கு' எனப் பெயரிட்டு அவர் பெருமையைப் பறைசாட்டியுள்ளனர்.

— ரட்ணு —

## திரை உலகில்

தயாரிப்பாளர் பாலாஜியின் சொந்தப் படத்தை நீண்ட இடைவெளிக்குப் பிறகு ஏ. சி. திருலோகசந்தர் இயக்க இருக்கிறார்.

✱ ✱

ஸ்ரீதேவி இந்திப் படங்களில் நடிக்கத் தொடங்கிய பிறகு, ஆங்கிலம் சரளமாகப் பேசுகிறார். ஆரம்பத்தில் இரவல் குரலில் காலம் தள்ளிக் கொண்டிருந்தவர் இப்போது சொந்தக் குரலிலேயே பேசுகிறார்.

✱ ✱

அடையாறு திரைப்படக் கல்லூரியில் டைரக்ஷன் பயின்ற சேதுராமன் இப்போது 'கவிதை பாட நேரமில்லை' என்ற படத்தை இயக்கி வருகிறார். படத்தில் நான்கு ஹீரோக்களில் இவரும் ஒருவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மையான ஆனந்தத்தை பெறுவதற்கு வழி யாது?

உலகிலேயுள்ள உயிர்கள் வெவ்வேறு இயல்புகளை உடையன. ஓர் உயிர்போல் ஒன்றிருக்காது.

குணங்கள்வேறு; குரல்கள் வேறு; முக அமைப்புகள் வேறு; செயல்கள் வேறு.

ஒரு மனிதனைப் போன்ற மற்றொரு மனிதன் ஐந்து கண்டங்களிலுமில்லை. ஒருவனின் கை ரேகையைப் போன்று ஐந்து கண்டங்களில் வாழும் ஐநூறு கோடி மக்களுக்கும் கிடையாது.

இவற்றையெல்லாம் அமைக்கின்ற இறைவனுடைய பேராற்றல் அளவிடற்கரியது.

நம் உடம்பில் பல உறுப்புக்கள் இருக்கின்றன அந்த உறுப்புக்கள் இன்றியும் வாழ்க்கை நடைபெறுகின்றது.

கண் போய் வாழலாம்; கை போய் வாழலாம்; காது போய் வாழலாம்; பல் போய் வாழலாம். ஆனால், உயிர் போய் வாழ முடியாது.

எனவே எல்லாவற்றையும் விட உயிர் மேலானது. அந்த உயிரினும் மேலானது ஒன்றுளது. அது தான் ஒழுக்கம்.

இத்தகைய ஒழுக்கம் நிலைபெறும் பொருட்டே வடிவங்கள் வேறாக அமைக்கப்பட்டன. ஒரே மாதிரி முகம் இருக்குமானால் யார் யாருடைய



வாரியார்

மனைவி என்றும், யார் யாருடைய கணவன் என்றும் கண்டுபிடிக்க முடியாமல் போகுமல்லவா?

இவ்வாறு வேறு உருவம், வேறு வேறு இயல்புகளையுடைய எண்ணில் கோடி உயிர்களுக்கும் எத்தனை எத்தனை கருத்து வேற்றுமைகள்.

பலப்பல வேற்றுமையுடைய அனைவருக்கும் ஒன்றில் மட்டும் கருத்து வேற்றுமை கிடையாது. அது எது?

எந்த மதத்தினரும், எத்தேசத்தவர்களும், எல்லாக் காலத்தவர்களும் கருத்து வேற்றுமையின்றி ஒற்றுமையாக விரும்புவது ஆனந்தம் ஒன்றுதான்.

எனக்குத் துன்பம் வேண்டுமென்று ஒருவர் கூட நினைக்காது.

## திருமுருக கிருபானந்தவாரியார்

ஆனந்தம் வேண்டுமென்று எல்லோரும் நினைக்கிறார்கள். ஆனால் ஆனந்தத்தை எவராவது நுகர்கின்றார்களா?

ஆனந்தம் வேண்டுமென்று விரும்புகின்றார்களேயன்றி ஆனந்தம் பெறுவதற்கு வழி எது என்று அறியாமல் திகைக்கிறார்கள்.

அன்றியும் ஆனந்தம் வேண்டும் என்று எண்ணி அதற்கு நேர்மாறாகத் துன்பத்தையே தேடுகிறார்கள்.

ஆமையைச் சொல்லுவது கடினம். கடப்பாரையால் அடித்தாலும் அது சாகாது. ஓடு கனமானது. கடவுள் அதன் தற்காப்புக்காக ஓட்டினை அதற்கு அமைத்திருக்கின்றார்.

மூன்று கற்களை அடுப்புப் போல் வைத்து அதன் மீது இரும்பு ஏனத்தை வைத்து, தண்ணீர் விட்டு, அதில ஆமையை எடுத்து இட்டு மேலே ஒரு தட்டை இட்டு மூடி, கீழே கட்டையை மாட்டி தீ மூட்டி விடுவார்கள்.

தண்ணீரில் சூடு ஏறுக போது ஆமை அந்த நீரில் மகிழ்ந்து விளையாடும். தனக்குச் சுவர்க்க வீடு கிடைத்தது போலக் கருதி இப்படியும் அப்படியும் நீந்தி இன்புற்று ஓடி ஆடி மகிழும். நீர் கொதிக்குமானால் சதைப்பகுதி

(6ஆம் பக்கம் பார்க்க)

# சுவாமி ஞானப்பிரகாசர்

சகல துறைகளிலும் சாதனை புரிந்து சரித்திரம் படைத்த சகலகலா வல்லவர்; சமயத் துறவி நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர்.

### கௌரவம்

சரித்திர ஆராச்சியாளனாக, தத்துவஞானியாக, மறைநூல் வல்லுனராக, கூரான நடிகனாக, எழுத்தாளனாக, இசை வல்லுனனாக, பன்மொழிப் புலவராக சகல துறைகளிலும் தமது முத்திரையைப் பதித்ததால், அவருக்கு, இலங்கை, ஜேர்மன் அரசுகள் முத்திரை வெளியிட்டு கௌரவித்தன.

நல்லூர்:-

ஊர்களிலெல்லாம் நல்லூர். சங்கம் நிறுவித் தமிழ் ஆராய்ந்த தகைமை பெற்ற ஊர் தமிழரின் தலைநகரான ஊர். ஆறுமுகநாவலர் பிறந்த ஊர் 43 ஆண்டுகள் சுவாமி ஞானப்பிரகாசரின் சேவையைப் பெற்று, அவரு 'குநல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் எனும் பெயரையும் பெருமையையும் தேடிக்கொடுத்த ஊர்.

சுவாமி அவர்கள் மானிப்பாயிலே பிறந்து, அச்சுவேலியிலே வளர்ந்தாலும், சேவை புரிந்தது நல்லூரிலேயே அதிகம்.

### மதமாற்றம்

1875 8. 30 மானிப்பாயிலே ஓர் இந்துவாக பிறந்த அவர் ஒரு வயதிலேயே தந்தையைப் பறிகொடுத்தார். இருவயதிலே கடும் நோயால் பாதிக்கப்பட்டார். சுவாமி ஞானப்பிரகாசரது இளமைப் பெயர் வைத்திலிங்கம் என்பதாகும்.

அப்போது தாயார் செய்த நேர்த்தியைத் தொடர்ந்து தாயாருடன் கத்தோலிக்க சமயத்திற்கு மாறினர்.

### ஆரம்ப கல்வி

அச்சுவேலி குசையப்பர் திண்ணைப்பள்ளியில் ஆரம்பக்கல்வியையும், சம்பத்தரிசியார் கல்லூரியில் உயர் கல்வியையும் கற்றுத் தேர்ந்தார்.

1893 இல் புகையிரதப் பகுதியில் எழுதுவினைஞராக கடமை புரிந்தார். ஒரு வருடம் பணிபுரிந்த பின் உத்தியோகத்தை உதறி குருத்துவ கல்விக்காய் மார்ர்னர் குரு மடம் ஏகினர்.

**நினைவுதின கட்டுரை**

குரு மாணவனாக இருந்தபோதே "தூதன்" எனும் பத்திரிகையை வெளியிட்டார்.

### எழுத்தாளன்

"காவலன்" ஈழகேசரி, "கலைச்சுடர்" முதலிய பத்திரிகைகளில் அவரது ஆக்கங்கள் வெளிவந்து அவரது ஆற்றல்களை வெளிஉலகுக்கு எடுத்தியம்பின.

இந்திய சஞ்சிகைகளும் அவரது ஆக்கங்களை விரும்புடன் வெளியிடத் தொடங்கின.

அவரது அறிவாற்றலால் பல பொதுப் பணிப் பொறுப்புக்கள் அவரை தேடிவந்தன.

### பொது சேவை

1940 இல் இலங்கை கையெழுத்துப் பிரதிகளின் ஆய்வுக் குழு

## ரட்ணதுரை

உறுப்பினராகவும், யாழ் ஆரிய திராவிட மொழி அபிவிருத்திச் சங்கத் துணைத்தலைவராகவும், 1944 இல் பல்கலைக்கழக 'செனற்' சபை உறுப்பினராகவும் பணியாற்றினார்.

### கத்தோலிக்க நூல்கள்

கத்தோலிக்க மக்களுக்கான பல நூற்றுக்கணக்கான நூல்களை எழுதி வெளியிட்டார் செப நூல்கள், சமய அனுசர நூல்கள், பிரசங்க நூல்கள், மத ரலாற்று நூல்கள் புனிதர்களின் வரலாற்று நூல்கள் என்பன இவற்றில் அடங்கும்.

### இந்து நூல்கள்

இந்துக்களுக்காக: பிள்ளையார் சரித்திர ஆராய்ச்சி, சுப்பிரமணிய (கந்தசுவாமி) சரித்திர ஆராய்ச்சி நூல்களை எழுதினர்.

### வரலாற்று நூல்கள்

தமிழரின் பூர்வ சரித்திரமும் சமயமும்(1920), தமிழரின் ஆதி இருப்பிடமும் பழம் சீர்திருத்தமும் (1932), வையாவசனம் (1921) யாழ்ப்பாண வைபவவிமரிசனம் (1928), இலங்கை கத்தோலிக்க திருச்சபையின் வரலாறு போன்ற வரலாற்று நூல்களை எழுதினர்.

இவற்றில் தமிழரின் பழம்பதி எதுவென்று ஆராய்ந்து மேற்காசியாவிலுள்ள பபிலோனிய கல்தேய நாடுகள் என்று கூறுகிறார். பண்டைய தமிழரின் நல்லியல்புகள் ஆராயப்பட்டு ஆங்கில வரலாற்று நூல்களின் எடுத்துக்காட்டுக்கள் தொடர்புபடுத்தப்பட்டுள்ளன.

### தருக்க சாத்திர நூல்

பல்கலைக்கழக மாணவர்களுக்காக எழுதப்பட்ட தருக்க சாத்திர நூல், அறிவுத்துறையால் எழுந்த ஓர் புதிய திருப்பமாகும். இந்நூலுக்கு 10 ஆங்கில நூல்கள் 11 தமிழ் நூல்களும் ஆதாரமாயின.

தமிழ் அமைப்புற்ற வரலாறு. தமிழ்மொழியின் வண்ணம், வடிவு முதலியன பல மொழி

(6 ஆம் பக்கம் பார்க்க)

# பண்டிதமணி: வரலாறும் காலமும்

(சென்றவாரத் தொடர்)

அக்காலத்தில் சித்திரை விடுமுறைக் காலம் நாற்பது முதல் நாற்பத்தைந்து நாள்கள் வரை நீண்டு நிலவுதல் வழக்கம். விடுமுறை வந்ததும் பண்டிதமணி அவர்கள் நடராசா அவர்களைக் கண்டார் கணித பாடம் வெகுதீவிரமாக நடந்தது நுட் முறைகள், சுருக்கமுறைகள் மடக்கைகள் முதலிய பெரிய முறைகள் யாவற்றையும் நடராசா அவர்கள் உற்சாகத்தோடு சொல்லிக்கொடுத்து வந்தபோது, பண்டிதமணி அவர்கள் கணித பாடத்தில் மெற்றிக்குலேசன் தரத்தை அடைந்துவிட்டார். அப்பால் அல்ஜிபிரா என்னும் அட்சரகணிதப் பயனையும் நடராசா அவர் பழக்கிவிட்டார்.

அடுத்து வந்த ஆசிரிய கலாசாலைப் புகுமுகத் தேர்வு பண்டிதமணி அவர்களுக்கு மிகச் சுலபமாயிருந்தது. மொழியறிவில் மிகவும் உச்சமான தரத்தை அடைந்திருந்தவர் அவர். அண்மையில் கணிதத்திலும் போதிய அறிவு பெற்றிருந்தார் நேர்முகப் பரீட்சையில் மனேச்சர் அவர்களின் நன்நடத்தைப் பத்திரம் வித்தியா பகுதியினரை வெகுவாகக் கவர்ந்தது, கனிய வைத்தது

பண்டிதமணி அவர்கள் 1927ஆம் ஆண்டின் ஆகஸ்ட் மாதத்தில் கோப்பாய் அரசினர் ஆசிரிய கலாசாலையில் சேர்ந்தார். அங்கே அதிபராக இருந்த பொன்னையா அவர்களுக்கு நாவலர் பாரம்பரியத்திலும், மனேச்சர் அவர்களின் நகைச்சுவை, கிண்டல், நக்கல் முதலியவற்றிலும் நல்ல பழக்கமும் விருப்பமும் இருந்தமையால் அவற்றில் ஊறி நனைந்த அந்த பண்டிதமணி அவர்களை உழுவல் அன்போடு உளமார வரவேற்றுபசரித்து மிக்க மதிப்போடு பழகத் தொடங்கினார் நன்றாகப் படித்தவர்களோடும் புலமையாளருடனும் மதிப்புக்கொண்டிருந்த அதிபர் அவர்கள், பண்டிதமணி அவர்களை வெகு கௌரவமாக நடத்தியதோடு, அவர் உறைவதற்கு தனி அறை ஒன்றை உதவினர் பண்டிதமணி அவர்கள் இளமையிலேயே அதிகாலையில் எழுந்து கருமங்கள் செய்யப் பழகியிருந்தவராகையால் அங்கேயும் விடியுமுன் நித்திரைவிட்டெழுந்து நன்றாகப் படித்துவந்தார்.

கணிதப் பேராசிரியராயிருந்த உடுவில் முருகேசபிள்ளை அவர்கள் தம் துறையில் நல்ல பாண்டித்தியம் பெற்றிருந்தவர். அவர் பண்டிதர்மாருக்குக் கணிதம் வருமா என்று ஒரு காலத்தில் கருதியிருந்தவர். முன்னொரு காலத்தில் பிராமணரல்லாத வருணத்தாருக்குக் கணிதம் வராது என்ற கருத்தும் சிலரிடம் நிலவியது. கணிதம் பிராமணரின் ஏகபோக உரிமையல்ல என்று ஈழநாட்டில் நிரூபித்தவர் சைவப் பெரியார் புலோலியூர் சு.சிவபாதசுந்தரம் அவர்கள். சிவபாதசுந்தரம் அவர்களுக்கு முன் அதனை நிரூபித்ததோடு, வெள்ளைக்காரருக்கு யாழ்ப்பாணமத்தியகல்லூரியில் திரிகோண கணித நுட்பங்கள் பலவற்றைக் காட்டிக்கொடுத்தவர், வட்டுக்கோட்டை வேளாளன் முத்துக்குமார சிதம்பரப்பிள்ளை என்னும் பெரிய நெவின்சர். அவரே யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியை நகர இந்து உயர்நிலைப் பாடசாலை என்னும் பெயரில் முதலில் ஆரம்பித்தவர்.

பண்டிதமணி அவர்களுக்குக் கணக்கு நன்றாக வரும் என்பதை முருகேசர் அவர்கள் இரண்டு மூன்று பாட நேரங்களில்

## ஐந்து ஆண்டுகள் படித்தறிய வேண்டிய கணித நுட்பத்தை ஒரு மாதத்தில் கற்றார்

அறிந்து கொண்டார். அதனால் அவரும் அதிபரைப் போன்று தம் மாணாக்கனுக்கு மதிப்புக் கொடுக்கத் தொடங்கினர். ஐந்தாண்டுகள் படித்தறிய வேண்டிய கணிதத்தை ஒரு மாதத்தில் நடராசா அவர்களின் நுட்பவிதிகளால் அறிந்து கொண்ட பண்டிதமணி அவர்களை முருகேசர் அவர்கள் வெகுவாகப் பாராட்டினார்.

தமிழ்த் துறைக்குத் தலைவராயிருந்த மகாலிங்கசிவம் அவர்கள், தம் மகன் முறையினரான பண்டிதமணி அவர்கள், தம்மிடம் இளமையில் பழமலை அந்தாதி படித்ததையும், இடையில் மாடு மேய்த்ததையும், அவர் படித்தவராக வேண்டும் என்று தாங்கள் எல்லோரும் விரும்பியதையும் நினைத்தார். தாமும் தம் குடும்பத்தாரும் பண்டிதமணி அவர்களை உருவாக்குவதற்கு எடுத்த முயற்சிகள் சர்க்கரைப் ந்தலில் தேன் மாரி பெய்தமுறை போக, இப்போது பருத்தி புடைவையாய்க் காய்க்கின்றதே என்று மகிழ்ந்தார்.

மட்டுவில் சின்னத்தம்பியார் தன் மைந்தன் கணபதிப்பிள்ளை, மகாலிங்கசிவம் அவர்களைப் போலப் பிரகாசித்தல் வேண்டும் என்று கண்ட கனா, அவர் கண்காண நனவாகிவிட்டதே என்று பெருமிதங் கொண்டார். மகாலிங்கசிவம் அவர்களின் இலக்கண இலக்கிய பாடங்களில் பண்டிதமணி அவர்கள் திறமை காட்டியமை போக, அவர் அந்தப் பாடங்களை வெகுவாகக் கருத்தூன்றிக் கவனித்து இரசித்தமை சிவம் அவர்களுக்கு உளப் பூரிப்பை உண்டாக்கியது

பண்டிதமணி அவர்களோடு ஆசிரியப்பயிற்சி பெற்றவர்களுள் ஒருவர்

**★ க. சி. குலரத்தினம் ★**

திரு வே சங்கரப்பிள்ளை அவர்கள் அவர் விழிசிட்டி சேர். கனகசபை வித்தியாலயத்து அதிபராயிருந்தவர். பண்டிதமணி சைவல்ல சைவப் பிரசாரகர். பண்டிதமணி அவர்களைத் தம் வழிகாட்டியும் பெருபகாரியுமென அத்தியந்த நட்புரிமையோடு கொண்டாடி வந்தவர்.

ஆண்டில் இளைஞராயினும் பண்டிதமணி அவர்களோடு சகபாடியாயிருந்த வடமராட்சிப் பொன். கிருஷ்ணன் அவர்கள் அழந்தைபுள்ளம் படைத்தவர், உதாகலமாகப் பேசுபவர். அவர் மகாலிங் சிவம் அவர்களுக்குப்பின் கோப்பாயிலும், பின் பலாலியிலும் தமிழ்ப் பேராசிரியராயிருந்தவர். நகைச்சுவையும் பன் முறுவலும் ததும்பப்பாடஞ்சொன்னவர் பண்டிதமணி அவர்களைப் பற்றி, "பயிற்சி பெறும் போதே பேராசான்" என்று மகுடமிட்டெழுதிய பொன். கிருஷ்ணன் அவர்கள், தொடர்ந்து எழுதிய இடத்தில், "பயிற்சி பெறும் காலத்திலேயே பண்டிதமணி தம் சகபாடிகளுடைய பெருமதிப்பைப் பெற்றது ஆச்சரியமல்ல அவர்கள் அங்கே பயிற்சி பெறுபவர்களுள் ஒருவராகக் கருதப்படாது, பெருமதிப்புக்குரிய பேராசிரியர்களுள் ஒருவராகவே மதிக்கப்பட்டார். தொல்காப்பியம் என்ற இலக்கணத்தைப் பார்த்து நடுநடுங்கிய என்போன்றோரும். அவர் சனி, ஞாயிறு நாள்களில் நடத்திய இலக்கண வகுப்பின் திறத்தினாலே பாலபண்டிதராகி விட்டோம்.

மாலை நேரம் உலாவுகையிலும் அவர் சொல்லும் கதைகளாற் பயன் பெற்றோம். வேப்பந்தோப்பிலும் சுற்செறி பாதையிலும், வடலி வரிசையூடும் தோட்டங்களினருகிலும் பண்டிதமணி அவர்களுடன் என்போன்றோர் சென்றபோதெல்லாம், அன்னார் தமது ஆசிரியர் பற்றியும், நாவலரையா பற்றியும் கூறியவற்றை இன்னும் அந்தச் சூழல் எடுத்தியம்பும்."

— வளரும்.

# மானும் மீனும் குவளையாய் நயனங்கள் மதிக்கப்படுகின்றன

கவிஞர்கள் கண்களைப் பற்றி-குறிப்பாகப் பெண்களின் கண்களைப் பற்றி-எப்படி எல்லாமோ அழகு பட வர்ணித்திருப்பதைப் பார்க்கின்றோம். மான் போன்ற கண்கள், மீன் போன்ற கண்கள், வாள் விழியாள், வேல் விழியாள் என்று வர்ணித்திருப்பதையும் காவி மென் மலரையும் குவளை மலர்களையும், தாமரையையும் உவமித்திருப்பதையும் காணுகின்றோம்.

பெண்களின் கண்கள் மருண்ட நோக்கு உடையவை எனும் பொருளில் 'பிணையேர் மட நோக்கு' என்று வள்ளுவரும் குறிப்பிடுகிறார்

வேடன் ஒருவன் காட்டுக்குள் வேட்டையாடச் செல்கிறான். ஒரு பெண் மான் தனியே மேய்ந்து கொண்டிருக்கிறது புதர் மறைவிலிருந்தபடி அந்த மானின் மீது குறி வைக்கிறான் வேட்டுவன் மானின் மற்ற அவயவங்களில் அம்பு பட்டாலும் மான் தப்பி ஓடி விடக் கூடும் என்று மானின் கண்களின் மீதே குறி வைக்கிறான்.

அந்தக் கண்களைக் கூர்ந்து கவனித்த மாத்திரத்தில் அவன் உடம்பே 'கிடுகிடு' என நடுங்க ஆரம்பித்தது. கண் கலங்க உள்ளமும் கலங்க, அவன் கையிலிருந்த அம்பும் வில்லும் நழுவிக் கீழே விழுந்து விடுகின்றன என்ன காரணம்!

அந்த மானின் மருண்ட நோக்கு, குடிசையில் விட்டு வந்துள்ள தன் மனைவியின் கண்களை ஞாபகப்படுத்தி விடுகின்றன.

இப்போது அந்த மான் வேடனின் கண்களோடு மானாகவே தோன்றவில்லை. தன் பிரியமுள்ள மனைவியாகவே அந்த மானைப் பார்க்கிறான் — நினைக்கிறான்.

மெய்யத் தொகுத்தேன் குறத்தி நோக்(கு) ஏற்ற செனக் கையில் சலை கலைந்து 'உன்னிமான் பையப்போ'

'நீ மெதுவாகப் போம்மா. நான் உன்னை ஒன்றும் செய்யவில்லை' என்று அன்பொழுகப் பேசுகிறான் நக்கீர தேவ நாயனார் பாடிய 'திருஈங்கோய் மலை எழுபதில்' இந்தக் காட்சியைக் காண்கின்றோம்.

ஆரண்யத்தில் ராமன் பர்ணசாலையில் தனியே அமர்ந்திருக்கிறான். அவனை மயக்கிக் கவர்ந்துவிட சூர்ப்பனகை திட்டமிடுகிறாள்.

'இந்த இப்பிறவிக்கிரு மாதரைச் சிந்தையாலும் தொடாத' இராமனை மல்லவா நிலை தடுமாற வைக்க வேண்டும். அதற்காகச் சூர்ப்பனகை மோகன உருவம் பெற்று, சிருங்கார வல்லியாக வரும்போது,

## இலக்கியத்தில் கண்கள்

'மானின விழி பெற்று, மயில் வந்ததென வந்தாள்' என்று கம்பனின் சொற்சித்திரம் காட்டுகிறது

மதுரையில் கோவில் கொண்டுள்ள ஜெகன் மாதாவுக்கு 'அங்கயற் கண்ணி', 'மீனாக்ஷி' என்றெல்லாம் திருநாமங்கள் உண்டு

மீன் போன்ற அழகிய கண்களையுடையவள் தாய் என்பது மட்டும் பொருள் அல்ல. மீன், தான் ஈன்ற முட்டைகளைத் தன் பார்வையின் வேகத்தாலே குஞ்சுகளாக்கி அவற்றைக் கண்காணிப்பதே போல. மும்மைப் புவன முழுதீன்ற அன்னையாகிய மீனாக்ஷி, சகல ஜீவராசிகளையும் தன் கருணைக் கண்களின் கடாட்சத்தாலே காத்து ரட்சிப்பதால் தான் அவளுக்கு அத்தகைய பெயர்கள் ஏற்பட்டுள்ளன என்பதும் அறியத் தக்கன.

இராமன் சீதையை மாலை இட மணவாளனாக உலா வருகின்றான். மிதிலை நகரத்துப் பெண்கள் வீட்டு முற்றங்களிலும், மாடிகளிலும், சாளரங்களின் அருகிலும் குழுமி நிற்கிறார்கள்.

இங்கே கம்பன் பெண்கள் என்று சொல்லவில்லை கண்கள் என்று சொல்லவில்லை. பார்த்தார்கள் என்றும் கூடச் சொல்லவில்லை.

'ஆனகத்திடை அரமியதளத்தினும் அனந்த சாளரத்தினும் பூத்தன தாமரை மலர்கள்' என்று [illegible] தாமரை மலர்களைப்

(6ஆம் பக்கம் பார்க்க)

## உண்மையான பக்தன்

எவன் கடவுளிடத்தில் மனம், ஆன்மா, இரண்டையும் அர்ப்பணம் செய்து விடுகிறானோ, எவனைக்கண்டு யாரும் பயம் கொள்வதில்லையோ, எவனுக்குப் பிறரிடம் பயம் இடையதோ, எவன் அச்சம், துன்பம் பெரு மகிழ்ச்சி இவை நீங்கி விளங்குகிறானோ, எவன் தூய்மையானவனோ, எவன் முயற்சியில் சோர்ந்தும் அதனால் பாதிக்கப்படாமல் இருக்கின்றானோ, எவன் நன்மை தீமை இப்படி எந்தப் பயனையும் கருதா திருக்கிறானோ, எவன் எதிரியையும் நண்பனையும் சமமாக நடத்துகிறானோ, எவன் அவமானத்தையும் புகழையும் கண்டு மனம் மாறுவதில்லையோ, எவன் பெருமை வந்த போதும் செருக்கு அடைவதில்லையோ, எவன் தன்னைப் பிறர் நிந்திக்கும் போதும் கலங்குவதில்லையோ, எவன் அமைதியையும் தனிமையையும் விரும்புகிறானோ, எவன் ஒழுக்க நெறியுள்ளவனோ — அவனே உண்மையான பக்தன்.

- மகாத்மா காந்தி -

# காலத்தால் அழியாத வரலாற்றுக் கடிதங்கள்

## அசோகர் காலத்திய உலகம்

மார்ச்சு 31, 1932

அசோகர் தொலைவிலுள்ள நாடுகளுக்கும் தரும மகாமாத்திரர்கள் எனப்பட்ட மதபோதகர்களையும் தூதர்களையும் அனுப்பினார் என்றும், இந்தியாவிற்கும் இந்நாடுகளுக்கும் இடைவிடாத தொடர்பும் வியாபாரமும் இருந்து வந்தன என்றும் கண்டோம்.

அக்காலத்திய தொடர்புகளைப் பற்றியும் வியாபாரத்தைப் பற்றியும் நான் பேசும்போது அவைகளுக்கும் இக்காலத்தில் ஏற்பட்டுள்ள தொடர்புகளுக்கும், நடைபெறும் வியாபாரத்துக்கும் உள்ள வேற்றுமையை நீ நினைவில் வைக்க வேண்டும்.

இக்காலத்தில் ரயில் மார்க்கமாகவும், கப்பல் மார்க்கமாகவும், ஆகாய விமானங்கள் மூலமாகவும் ஜனங்களும் பண்டங்களும் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் போவது மிகவும் சுலபமான காரியம் ஆனால் பழைய காலத்தில் பிரயாணம் என்றால் அது அபாயம் நிறைந்ததாகவும் நீண்டதாகவும் இருந்தது.

துணிச்சலும் தீரமும் படைத்தவர்களே அதை மேற்கொண்டார்கள் ஆகவே முற்காலத்திய வியாபாரத்தையும் தற்காலத்திய வியாபாரத்தையும் ஒப்பிட்டுப் பார்ப்பது பொருந்தாது

அசோகர் குறிப்பிடும் இந்த தூரதேசங்கள் யாவை? அவருடைய காலத்தில் உலகம் எவ்வாறு இருந்தது? எகிப்து, மத்தியதரைக்கடல் நாடுகள் ஆகிய இவை நீங்கலாக ஆபிரிக்காவைப் பற்றி நமக்கு ஒன்றுமே தெரியவில்லை.

ஐரோப்பாவின் வட, மத்திய, கீழ்ப்பாகங்களைப் பற்றியும் ஆசியாவின் வட, மத்தியபாகங்களைப் பற்றியும் நாம் அறிந்திருப்பது மிகச் சொற்பமே

அமெரிக்காவைப்பற்றியும் நமக்கு ஒன்றும் தெரியவில்லை ஆனால் ஆதிகாலத்திலிருந்தே அமெரிக்காவில் நல்ல வளர்ச்சியுற்ற நாகரிகங்கள் இருந்து வந்ததாகப் பலர் நினைக்கிறார்கள்

இதற்கு நெடுநாளைக்குப் பிறகு கி.பி. பதினைந்தாம் நூற்றுண்டில் கொலம்பஸ் என்பவர்

### நேருவிடமிருந்து இந்திராவுக்கு

அமெரிக்காவைக் கண்டுபிடித்ததாகச் சொல்லப்படுகிறது அந்தக் காலத்திலேயே தென் அமெரிக்காவிலுள்ள பெருவிலும் அதைச்சுற்றியுள்ள பிரதேசங்களிலும் ஓர் உயர்ந்த நாகரிகம் இருந்ததாக நாம் அறிகிறோம்.

கி. மு. மூன்றாவது நூற்றாண்டில் இந்தியாவில் அசோகன் வாழ்ந்து

(6 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# முதலில் சிரமம் தராத தொழுநோய் முற்றிய பின்னர் ஆளையே கரைத்துவிடும்

மனித விஞ்ஞானத்தில் பல சாதனைகளை ஏற்படுத்தி விண்ணில் சஞ்சரித்த—ஏனைய கோள்களிலும் வாழும் நிலையை விஞ்ஞானம் மனித வர்க்கத்துக்கு தாரைவார்த்துக் கொடுத்துவிட்ட போதிலும்—

புதிய பல நோய்கள் மனித வர்க்கத்தை ஆட்டிப்படைப்பதும் கசப்பான உண்மையே.

நோய்களுக்கு நவீன வைத்தியங்களையும்-சிகிச்சைகளையும் கண்டுபிடிக்கும் விஞ்ஞானிகளை திணறடிக்கும் ஒரு பிரச்சினையாக இருக்கும் தொழு நோய் பற்றிய 'விழிப்பு விளக்கு' இப்போது வட இலங்கையில் தேசிய ஆரம்பித்துள்ளது. முன்னெப்பொழுதையும் விட இப்போது வேகமாக தொழு நோய் வட மாகாணத்தில் பரவி வருவதாக இலங்கையில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட சுகாதார ஆய்வுகள் புலப்படுத்துகின்றன.

எனவே யாழ் மாவட்ட தொழு நோய் பொறுப்பதிகாரி திரு. எம். குணரட்ணம் அவர்கள் சஞ்சீவிக்காக பேட்டி காணப்பட்டார்.

கேள்வி:

தொழு நோய் என்பது எத்தகையது? அது எதனால் உண்டாகிறது?

பதில்:

தொழு நோய் ஒரு பரம்பரை வியாதி அல்ல. இது மிகச் சிலருக்கு மாத்திரம் தொற்றக்கூடியது. குணப்படுத்தக்கூடிய இவ்வியாதி மைக்கோ பக்ரீறியம் லெப்றி (MYCOBACTERIUN LEPRAE) எனப்படும் கிருமியினாலேயே பரப்பப்படுகிறது. தொழு நோயை வராமல் தடுக்க இதுவரையில் மருந்து எதுவும் கண்டு பிடிக்கப்படாததும் குறிப்பிட வேண்டியதே.

கேள்வி;

வேகமாகப் பரவிவரும் இந்நோயைக் கட்டுப்படுத்த இந்நோயின் அறிகுறிகளை தெரிந்து வைத்திருத்தல் அவசியமா?

பதில்:

தொழு நோயில் இரு வகைகள் இருக்கின்றன. முதலாவது தொற்றா நோய் மற்றது தொற்றும் நோய்.

தொற்றா நோயின் ஆரம்ப அறிகுறிகளை முதலில் கவனிப்போம். உடம்பில் எங்காவது செம்பு அல்லது பித்தளை நிறத்தில் தேமல் போன்ற வடுக்கள் தென்படும். அத்துடன் தழும்பில், உணர்ச்சி இருக்காது. அந்தப்பகுதியில் ரோமம் வளராது. வியர்வையும் இருக்காது. சிலருக்கு கை கால்கள் மட்டும் உணர்ச்சியின்றி விறைப்பாக தோலில் வித்தியாசமின்றியும் இருக்கலாம்.

## யாழ். தொழுநோய் தடுப்பு அதிகாரி தரும் பயனுள்ள தகவல்கள்

இவ்வகை நோயாளிகளிடமிருந்து கிருமிகள் வெளிப்படாமையால் மற்றவர்களுக்கு இவர்கள் நோயைப் பரப்பமாட்டார்கள்.

இனி தொற்றும் தன்மையுடைய நோயைப் பற்றிக் கவனிப்போம். முகம், காதுகள் மற்றும் அவயவங்களில் உள்ள தோற்பகுதிகள் தடித்து உயர்ந்தும் அவற்றின் நிறம் வெண்மையாக அல்லது சிவப்பாக மாறியும் உரோமமும் வியர்வையும் அற்று இருக்கும். சிவந்த சிறுசிறு கொப்புளங்களும் காணப்படலாம். மூக்கின் நுனியிலும் காதிலும் அவைப் பழுது ஏற்படலாம். ஆறு மாதங்கள் தொடர்ச்சியாக இரு வகை மருந்துகளை உட்கொண்டால் நிச்சயமாக இந்நோயின் தாக்கத்திலிருந்து தொற்றும் தன்மை அற்ற நோய் பூரணமாக விடுதலை பெற முடியும்.

தொடர்ச்சியாக இரண்டு வருடங்களுக்கு முக்கூட்டு மருந்துகளை பாவிப்பவர்கள் தொற்றும் தன்மையுள்ள நோயிலிருந்து பூரண குணமடைவர்.

கேள்வி:

பயங்கரமான இந்நோயை கட்டுப்பாட்டிற்குள் வைக்க முடியாமல் போவதற்கான காரணம் என்ன?

பதில்:

இந்த நோய் ஆரம்பத்தில் எவ்வித கஷ்டத்தையும் நோயாளிக்குக் கொடுப்பதில்லை. நோயாளிக்கு துன்பம் ஏற்பட்டால்தான் அவர் வைத்தியரை நாடுவார். இதனால் வைத்தியர்களும் தொண்டர் ஸ்தாபனங்களும்தான் நோயாளியை தேடிப்போக வேண்டியுள்ளது.

கேள்வி:

யாழ் மாவட்டத்தில் எவ்வளவு தொழுநோயாளர்கள் காணப்படுகிறார்கள்? எப்பகுதியில் அதிகமாக இந்நோய் காணப்படுகிறது?

பதில்:

யாழ் மாவட்டத்தில் 601 பதிவு செய்யப்பட்ட தொழு நோயாளர்கள் சிகிச்சை பெறுகிறார்கள். சிகிச்சைக்கு வராத நோயாளர்கள் சுமார் 2400பேர் இருக்கிறார்கள் என நாம் அஞ்சுகிறோம்.

கேள்வி:

தொழு நோயினால் நோயாளி எவ்வாறு பாதிக்கப்படுகிறார்?

பதில்:

முதலில் எவ்வித துன்பம் இன்றி இருக்கும் நோயாளி சிகிச்சை பெறாவிட்டால் ஏனையோருக்கும் நோயைப் பரப்புகிறார். நோய் முற்றியதும் பலர் கை, கால்களில் உள்ள சதைகள் குறைந்து அவயவங்களில் சோர்வாதம் உண்டாகிப் பின், கை கால்களிலுள்ள விரல்களின் நீளம் குறைந்து வரலாம்.

முகத்தில் அல்லது இரு பக்க கண்களிலும் கண்களை மூட முடியாதவாறும் வாயை அசைக்க முடியாதவாறும், உண்டாகலாம். எலும்புகள் வலுவிழந்துவிடும். இதனால் புண்கள் தோன்றும்.

கேள்வி:

யாழ் மாவட்டத்தில் எங்கெங்கு எவ்வாறு சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன?

பதில்:

யாழ் அரசினர் வைத்தியசாலை சரும நோய் சிகிச்சைப்பிரிவு பிரதி மாதமும் 2-ம்,4-ம் புதன்கிழமையிலும் தொல்புரம் அரசினர் வைத்தியசாலையில் பிரதி மாதமும் இரண்டாம் திங்கட்கிழமைகளிலும் ஊர்காவற்றுறை ஆஸ்பத்திரியில் பிரதிமாதமும் 3 வது சனியும், புங்குடுதீவு ஆஸ்பத்திரியில் ஒவ்வொரு மாதமும் 3ம் செவ்வாயும், பருத்தித்துறை வைத்தியசாலையில் நான்காம் திங்களிலும், வல்வெட்டித்துறை ஆஸ்பத்திரியில் 2ம் செவ்வாயிலும், சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் 4ம் செவ்வாயிலும், கிளிநொச்சி வைத்தியசாலையில் 3ம் திங்களிலும், அச்சுவேலியில் பிரதிமாதமும் 2ம் சனிக்கிழமையும், புத்தூர் கிராம அபி. சங்கத்தில் 3ம் புதனிலும் சிகிச்சை நிலையங்கள் இயங்குகின்றன.

இவை லீவு நாட்களாக இருந்தாலும் சிகிச்சைகள் வழமைபோல் நடைபெற்றுவருகின்றன.

யாழ் மாவட்ட தொழு நோய் பொறுப்பதிகாரி திரு. எம். குணரட்ணத்தின் இந்தப் பட்டியல் நீண்டதாக — பயனுள்ளதாக அமைகின்றது.

சிகிச்சை பெறுபவர்களின் விபரம் மிகவும் அந்தரங்கமாகவே வைக்கப்படுகின்றது என்றும் அவர் கூறினர். ✱

பேட்டி: சபா. புஷ்பநாதன்

## வைத்திய சஞ்சீவி

# வடக்கில் நிலைகொண்டுள்ளது ஆக்கிரமிப்புப் படையே தான்

பி.பி.ஸி. செய்தியாளராக கொழும்பில் பணிபுரிந்த ஹம்பிறொக்லிவியை இலங்கை அரசு அண்மையில் வெளியேற்றியது. அவர் வெளியேறு முன்னர் கொழும்பில் இருந்து கடைசியாக அனுப்பி லண்டன் கார்டியன் (11-8-86) நாளிதழில் வெளியான கட்டுரையின் முதற்பகுதி சென்றவார சஞ்சீவியில் பிரசுரமானது.

அதன் இறுதிப் பகுதி இங்கு தரப்படுகிறது.

(சென்றவாரத் தொடர்)

தமிழ்ப் போராளிகளின் சக்திமிக்க ஆயுதமாக நிலக்கண்ணி இருந்து வருகிறது.

சிங்கப்பூரில் உள்ள சர்வதேச ஆயுதசந்தையில் இலங்கை 10 அமெரிக்க பெல் ஹெலிக்கொப்டர்களை வாங்கியது.

இஸ்ரவேல், கிளர்ச்சி எதிர்ப்பு ஆலோசனைகளை வழங்கி வருகிறது.

ஒரே நேரத்தில் 2,000 இலங்கை இராணுவத்தினருக்கு பாகிஸ்தானில் பயிற்சி வழங்கப்பட்டது.

அதிரடிப் பொலீஸ் படையினருக்குப் பயிற்சி வழங்குவதில் சனல் தீவில் இருந்து இயங்கும் கினி மினி கூலிப்படையினர் உதவுகின்றனர். மேற்கு நாட்டுக்கூலிப் படையினரான இவர்களுக்கு மாதம் 2,000 முதல் 3,000 பவுண்கள் வரையான சம்பளம் வழங்கப்படுகிறது.

ஆயுதப்படையில் உள்ளவர்களின் எண்ணிக்கை உத்தியோக ரீதியில் வெளியிடப்படவில்லை.

### படைப்பிரிவுகளும் ஆள்சேர்ப்பும்

ஆனால் எட்டு நிரந்தரப் படைப்பிரிவுகள் உள்ளன.

இவற்றைவிட எட்டு ரிசேர்வ் படைப்பிரிவு உள்ளன.

5000 வரையான கெரில்லா போராளிகளை எதிர்த்துப் போரிட இவர்கள் தயாராக உள்ளனர்.

4,000 சிப்பாய்கள் கொண்ட கடற்படை, பாக்குநீரிணையைக்காவல் புரிகிறது.

20,000 பேர் பொலீஸ் படையில் உள்ளனர். ஆண்டு முடிவில் 7,000 பேர் புதிதாகச் சேர்க்கப்படவுள்ளனர்.

இவற்றைவிட வேறு படைகளும் உள்ளன.

### இராணுவத்துக்குள் ஜெயவர்த்தனாவின் கை

மனித சக்தியைத் திரட்டும் திட்டத்தின் கீழ் பல்லாயிரக்கணக்கான இளைஞர்களுக்கு இராணுவப் பயிற்சி வழங்குவதில் இளைஞர் விவகார வேலைவாய்ப்பு அமைச்சு ஈடுபட்டுள்ளது.

கூலிப்படையினரால் பயிற்றுவிக்கப்பட்ட 700 பேர்கொண்ட விசேட அதிரடிப்படை, ஜனாதிபதி ஜெயவர்த்தனாவின் மகன் திரு ரவி ஜெயவர்த்தனாவின் நேரடிப் பொறுப்பில் உள்ளது.

பத்தாயிரத்துக்கு அதிகமான சிங்களவர்கள் ஊர்காவல் படையினராக திரட்டப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளனர்

### திட்டமிடப்பட்ட சிங்களப்படை

இனரீதியான யுத்தத்தில் அரச படைகளுக்கு ஆட்சேர்ப்பும் இனரீதியில் இடம்பெறுகின்றது தமிழருக்கு எதிரான யுத்தத்தில் சிங்களச் சிப்பாய்கள்தான் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வடபகுதியில் இராணுவம் ஆக்கிரமிப்புப் படையாகத்தான் இருக்கிறது.

அலுவல்கள் காரணமாகப் பயணம் செய்யும் தமிழ் இளைஞர்கள் அடையாளம் காட்டும்படி கேட்கப்படுகின்றனர். வரிசையாக நிறுத்தப்பட்டு கைகளைத் தலைக்கு மேல் உயர்த்தும்படி பணிக்கப்படுகின்றனர்.

இச்சோதனையை நடத்தும் சிங்களச் சிப்பாய்களும் பயத்தின் மத்தியிலே செயல்படுகின்றனர்.

எந்த நேரத்திலும் அவர்களுக்குச் சூடு விழலாம்; அல்லது நிலக்கண்ணிவெடிக்குள் அகப்படலாம்.

### படுகொலைகளும் இராணுவ விசாரணைகளும்

படுகொலைக்குக் காரணமான ஆயுதப்படையினர் மீது அரசு விசாரணைக்கு உத்தரவிடுகின்றது.

ஆனால் விசாரணை முடிவுகள் பகிரங்கப்படுத்தப்படுவது இல்லை. ஒரு சிப்பாயாவது இராணுவ நீதிமன்றத்தினால் விசாரிக்கப்படவில்லை.

1981 இல் உள்மோதலில் ஈடுபட்ட இரண்டு இராணுவப் பிரிவுகள் கலைக்கப்பட்டன.

அப்படியான உள் மோதல்கள் இப்போதும் உள்ளன.

### பாதுகாப்பு படைக்குள் புதிய ஒரு பூதம்

'பிரச்சினைகள் சூடு பிடிக்கத் தொடங்கிய சில ஆண்டுகளில் எமது பாதுகாப்புப் படைகள் மத்தியில் பூதம் ஒன்றை உருவாக்கியுள்ளோம்.

தீவிரவாதத்தை எதிர்க்க இந்த பூதம் அவசியம் தேவை.

ஆனால் இலங்கையில் அமைதி மீண்டும் திரும்பிய பின்னர் இப்பூதத்தை நம்மால் கட்டுப்படுத்த முடியுமா? என்பதே இன்றுள்ள கேள்வி'' -

இப்படி ஓய்வு பெற்ற அதிகாரி சொன்னர் ✱

**சிங்களமயப்படுத்தப்பட்ட இராணுவம் இலங்கைத் தமிழர்களைக் கொடுமைப்படுத்துகிறது**

## உண்மையான...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

அவிந்து ஆமை மாண்டு ஒழியும். தனக்கு நேர்ந்து உள்ள துன்பத்தை இன்பமாக மதி மயங்கி ஆமை நினைக்கின்றது.

வாதம், பித்தம், சிலேத்துமம் என்ற மூன்றும் மூன்று கற்கள். இந்த உடம்பு இரும்புக் கொப்பரை. ஆசை தண்ணீர். அதில் வாழ்கின்ற உயிர் ஆமை. பந்தபாசம் மேலே மூடியுள்ள தட்டு. தீவினையாகிய தீயை மூட்டி உள்ளார்கள்.

இந்த இடர்பாட்டில் வாழும் உயிர்கள் உணவு, உடை முதலிய பொருள்களை நாடி ஓடித் துன்பத்தை இன்பமாகக் கருதி உழல்கின்றன.

வளைத்து நின்றவர் கள்வர்
மணத்திடை துயரஞ் செய்து
தளைத்துவைத் துணியி லேற்றித்
தழல் எரிமடுத்த நீரில்
தளைத்து நின்றுடுகின்ற
ஆமைபோல்
தெளிவிலா தேன்
இளைத்து நின்றுடுகின்றேன்
என் செய்வான்
தோன்றினேனே!

என்று அப்பர் பெருமான் அருளிச் செய்கின்றார்.

எனவே பொன்னாலும் பொருளாலும் பெண்ணாலும் பிள்ளையாலும் ஆனந்தத்தைப் பெற இயலாது.

எனவே, ஆனந்தம் இறைவன் திருவடியில் தான் விளைகிறது. அதனைத் திருவடி இன்பம், பேரின்பம், பரமசுகம் என்றெல்லாம் சொல்வார்கள். இறைவன் திருவடி நிழலின் சுகம் அளவிடற்கரியது.

குற்றமில்லாத வீணை கானம் போலவும், வசந்த காலத்து முழு நிலாவைப் போலவும், இனிய தென்றல் மாருதம் போலவும், சிறந்த இளவேனிற் காலம் போலவும், வண்டுகள் ஒலிக்கும் தாமரைத் தடாகம் போலவும், இனிமைபயக்கும் அத்திருவடி இன்பம் என்று தமக்குத் தெரிந்த சில பொருள்களைக் கூறி உணர்த்துகின்றார் அப்பர் பெருமான். ✱

## மானாய் மீனாய்..

(5ம் பக்கத் தொடர்ச்சி)

போன்ற கண் அழகிகளாகிய பெண் அழகிகள் ஆங்காங்கே கூடி நிற்பதை நம் கண்முன்னே கொண்டு வந்து நிறுத்தி விடுகின்றான் கம்பன்!

உழவர்கள் வயல்களுக்குக் களை எடுக்கச் சென்றவர்கள், அங்கே களையாக மண்டிக்கிடக்கும் குவளை மலர்களை எல்லாம் பிடுங்கி எறிய மனம் வராமலே மலைத்து நிற்கிறார்களாம். காரணம் குவளை மலர்கள் தம் மனைவியரின் கண்களைப் போலவே தோன்றுகின்றனவாம்.

'மைஅணைந்த குவளை
தம் கண்களென்றும்
மலர் குமுதம்
வாயென்றும்
கடைசிமார்கள்
செய்யணைந்துகளைகளை
யாதேறும்...'

என்று வரும் திருமங்கை ஆழ்வாரின் பாடல் இப்படிக் கூறுகிறது

'கண்ணெனக்
குவளையும்
கட்டல் ஓம்பினர்'

என்று வரும் சீவக சிந்தாமணி பாடலிலும் இதே கருத்து காணப்படுகிறது.

(அடுத்த வாரம் வரும்)

## காலத்தால் அழியாத...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

வந்த காலத்தில் அமெரிக்காவிலும் நாகரிக முதிர்ச்சி பெற்ற மக்கள் சமுதாயத்தைச் சீருற அமைத்து வாழ்ந்து வந்தார்கள் என்று எண்ண இடமிருக்கிறது.

ஆனால் அவர்களைப் பற்றி யாதொரு உண்மையும் நமக்கும் தெரியவில்லை. ஆகவே வெறும் ஊகம் செய்து கொண்டிருப்பதில் பயனில்லை. உலகத்தில் நாம் கேட்டும் அறிந்தும் உள்ள இடங்களில் நாகரிகம் வாய்ந்த மக்கள் வாழ்ந்தார்கள் என்று நாம் தவறாக எண்ணுவது இயற்கையாய் இருப்பதால் நான் மேற்கூறியவற்றைச் சொன்னேன்.

நெடுங்காலமாக ஐரோப்பியர்கள் புராதன சரித்திரம் என்பது கிரேக்கர், ரோமர், யூதர் இவர்களைப் பற்றியதாகத் தான் இருக்க முடியும் என்று எண்ணி வந்தார்கள். பாவம்! உலகின் மற்றப்பாகங்கள் வெறும் வனாந்தரங்களாக இருக்க வேண்டுமென்பது அவர்களது கர்நாடக எண்ணம்.

பிறகு அவர்களிடம் உதித்த அறிஞர்களும் புதைபொருள் ஆராய்ச்சி நிபுணர்களும் சீனாவைப் பற்றியும் இந்தியாவைப் பற்றியும் இதர நாடுகளைப் பற்றியும் அவர்களுக்குத் தெரிவித்தபோதுதான் தங்களுடைய பழைய அறியாமையை அவர்கள் கண்டார்கள்.

ஆகவே நாம் அத்தகைய தவறுகளைச் செய்யாமல் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். உலகில் நிகழ்ந்த அனைத்தும் நமது சிற்றறிவிற்குள் அடங்கிக் கிடக்கிறது என்று நாம் நினைத்து விடக்கூடாது.

தற்போதைக்கு நாம் அறிந்து கொண்ட வரையில் அசோகன் காலத்திய நாகரிக உலகம் - அதாவது கி. மு. மூன்றாவது நூற்றாண்டு- முக்கியமாக ஐரோப்பாவையும் ஆபிரிக்காவையும் சேர்ந்த மத்தியதரைக்கடல் நாடுகளையும், மேற்கு ஆசியாவையும், சீனா, இந்தியா ஆகிய நாடுகளையும் தன்னகத்தே கொண்டிருந்தது என்று சொல்லலாம்.

அந்நாடுகளில் சீனாவுக்கும் மேல்நாடுகளுக்கும், ஏன் மேற்கு ஆசியாவுக்கும் கூட நேரான தொடர்பு இல்லை என்று தோன்றுகிறது.

மேற்கே வாழ்ந்தவர்கள் சீனாவைப்பற்றி விசித்திரமான எண்ணங்கள் கொண்டிருந்தார்கள். மேல்நாடுகளையும் சீனாவையும் பிணைத்து நின்ற ... சொல்லலாம்.

(தொடரும்)

## பெண்கள் மீது...

(4ஆம் பக்க தொடர்ச்சி)

அவள் உழைக்கின்ற உழைப்பில் அவளது பெற்றோருக்குக் கொடுக்கட்டும் என்கின்ற தாராள மனப்பான்மையுடன் விட்டுக் கொடுக்கின்ற ஒரு கணவனையாவது உதாரணத்திற்குக் காட்டுங்கள் பார்க்கலாம்.

சில ஆண்கள் தனது பெற்றோர் பட்ட கடனை வாதட்சணை வாங்கித் தீர்த்து விடுகின்றனர். இது தவறா? எனக்கேள்வி கேட்டு இருக்கின்றீர்கள். யார் சொன்னது தவறு என்று? ஆனால் அவர் சீதனம் வாங்கவில்லை என்று இலகுவாகத் தப்பித்துக் கொள்ளும் விதம் தான் தவறு.

குடும்பப் பிரச்சினை ஏற்படுகின்றபோது நீ என்ன சீதனம் கொண்டு வந்தாய்? என்று கேட்கின்ற ஆண்கள் தொண்ணூறு வீதம் உள்ளார்கள்.

ஆடம்பர வாழ்க்கைக்காகப் பெண் அங்கலாய்க்கின்றாள்; அதனால்தான் அவன் அப்படிக் கேட்கின்றான் என்று நீங்கள் நொண்டிச் சமாதானம் கூறுகின்றீர்கள்! பொதுவாக நீங்கள் ஒரு சிலரை மையமாக வைத்துக் கொண்டு பெண்வர்க்கத்திற்கு மாசு கற்பிக்க முனைகின்றீர்கள்.

பெண் மட்டும் தான் புகுந்த வீட்டிற்குச் செல்லும் போது என்ன சீதனம் கொண்டு போக ... வெள்ளத்தில் தத்தளிக்க ... அவளுக்கு மட்டும் தான் கற்பனை உலகம் சொந்தமா? தனது வாழ்க்கைத் துணைவியாக வரப்போகும் பெண்ணிடம் இவ்வளவு சீதனமே! என்று சீதனத்தில் கொடிகட்டிப் பறக்கின்ற ஆண்கள் எத்தனை பேர் உள்ளனர்.

ஒரு பெண்ணைக் காதலிக்கும் போது எவ்வளவு சீதனம் தர வேண்டும். எத்தனை பவுண் நகை தர வேண்டும் எத்தனை ஏக்கர் காணிதர வேண்டும் என்று இளைஞர்கள் ஒப்பந்தம் செய்து கொண்டா காதலிக்கின்றார்கள்? இல்லை. அப்பா அம்மாவிடம் கேட்டா காதல் நாடகம் ஆடுகின்றார்கள். காதல் கலியாணத்தில் வந்தால் பெற்றோருக்கு மறுப்புத் தெரிவிக்க முடியாது? உனக்காக வேண்டி நான் அவர்களை இழக்கலாமா? அப்படியானால் குறிப்பிட்ட சீதனத்தைக் கூறி இவ்வளவையும் தருவாயா? என்று கேட்கின்ற இளைஞர்கள் நம் சமூகத்தில் எத்தனை பேர் உள்ளனர். கண்ணே, மணியே என்று காதலித்து விட்டு இலகுவாகக் காய் வெட்டி விடுகின்ற வாலிபர்கள் நம் மத்தியில் பல பேர் இருக்கின்றார்களே.

இந்த நிலையில் முற்று முழுதாக சீர்கெட்ட இந்தச் சீதனப் பிரச்சினைக்கு பெண்கள் தான் காரணம் எனக் கூறி பெண் இனத்தின் மேல் பழியைச் சுமத்தி களங்கத்தை ஏற்படுத்துதல் மிகத் தவறானதாகும். ✱

## சுவாமி ஞானப்...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

களின் உற்பத்திக்கு மூல காரணமாய் நிற்பதை பல மொழிகளின் தொடர்போடு இந் நூலில் காட்டியுள்ளார்.

இந்நூல் தமிழ்மொழி ஆராய்ச்சி முளைத்துக் கிளைத்தற்கு விதைத்த விதைபோல் விளங்குகிறது.

### சொற்பிறப்பு ஒப்பியல் அகராதி

சொல்நிலைகளின் சுய உருவங்களை நிரைப் படுத்தி இவ்வகராதி அடியிடப்படுகிறது சுட்டுக்களிலிருந்து சொல்லை பெருகியவற்றைப் பல்வேறு மொழிகள், தமிழ்ப் பண்டைய இலக்கியங்கள் என்பவற்றுடன் தொடர்புறுத்தி விளக்கி ஆறு பாகங்கள் எழுதியுள்ளார்.

பன் மொழிப்புலமையும், சீரிய சிந்தனைத் திறமும், இலக்கிய அறிவும் இத்துறையில் அவருக்குத் துணையாயின.

### நூல்வடிவம் அறற நூல்கள்

விஞ்ஞான அகராதி, ஆங்கில தமிழ், பரராசசேகரன், சில் எழும் தமிழ், தமிழரின் ஆதியிருப்பிடமும் பழஞ் சீர்திருத்தமும்.

இவை யாவும் அவர் காலத்தில் தொடர் கட்டுரைகளாக பத்திரிகைகளிலும், சஞ்சிகைகளிலும் வெளிவந்தவை

இவரது ஆராய்ச்சியாற்றலையும் மொழியாராய்ச்சியின் பேராற்றலையும் நினைவூட்டுவதற்காக 1939இல் ஜேர்மன் அரசு முத்திரை வெளியிட்டு கௌரவித்தது.

இந்திய புதை பொருள் ஆராய்ச்சிக் கழகத்தலைவர் திரு. கெரஸ். 4000 வருடங்களின் முன் அழிந்து போன சிந்து நதிப்பள்ளத்தாக்கில் வெளிப்பட்ட சாசனங்களை வாசிக்க ஞானப்பிரகாசரின் துணையை நாடி 14-9-1936 இல் யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

ஒரு நடமாடும் நூல் நிலையமாக புத்தகங்களுக்குள்ளே தன்னைப் புதைத்துக் கொண்ட இவர் 22-1-1947இல் பூதவுடலாய் தன்னை மண்ணுள் புதைத்துக் கொண்டார்.

இத்தகைய மேதாவிகள் உலகில் அடிக்கடி தோன்றுவதில்லை. அப்படித் தோன்றினாலும் யாழ்ப்பாணத்தில் தோன்றுவார்கள் என்று சொல்வதற்கில்லை '' ✱

## இன்றைய பிரயாணம்!

காய்கள் பழங்களை
பெட்டியில் போட்டு
குலுக்கி நிரப்பி
இறுக்கி அடைத்து
அனுப்புதல் போன்றது
இன்றைய தினசரி
பஸ் பிரயாணம்

விலை கொடுத்து
சிறைப் பட்டு
சில மணி நேரம்
சிலுவையில்
அறைபடும்
அனுபவம்
இன்றைய தினசரி
பஸ் பிரயாணம்

க. நாகராஜா

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அணு ஆயுத யுத்தம் ஏற்பட்ட பின்....

அணுஆயுத யுத்தம் ஒன்றின் பின்னர் உலகம் ஓர் ஆண்டுக்கு மேலாக இருளில் மூழ்கி இருக்கும் பகல் என்ற பேச்சே இருக்காது.

இந்த நிலைக்கு 'அணு இரவு' (Nuclear Night) என்று ரஷ்ய விஞ்ஞானிகள் பெயர் சூட்டி உள்ளனர்.

'அணு இரவு' டன் குளிர்காலம் நிலவும் அதற்கு 'அணு குளிர் காலம்' (Nuclear Winter) என்று பெயர் சூட்டப் பட்டுள்ளது.

அணு குளிர்காலத்தோடு வரும் அணு இரவு ஓர் ஆண்டுக்கு மேல் நீடிப்பதால் நந்நீர் ஊற்றுக்கள் வற்றும். உலகம் முழுவதும் உள்ள பயிர் பச்சைகள் அழிந்து போகும்.

இதன் பின்னர் உருவாகும் நிலை மனிதன் வாழ்வதற்கு உகந்ததாக இருக்காது பல லட்சம் ஆண்டுகளுக்கு மேலாக இது நீடிக்கும்.

ஆகவே அணு ஆயுத யுத்தம் வெறும் யுத்தம் மட்டுமல்ல தன்னைத் தானே அழிக்கும் செயலாகக் கருதப்பட வேண்டும்.

ரஷ்ய விஞ்ஞானி நிகிடா மொயிசேவ் மேற்கண்ட தகவல்களை கம்பியூட்டர் கணிப்பின்படி தெரிவித்தார்.

அணு ஆயுத யுத்தத்தைத் தொடர்ந்து பல லட்சக் கணக்கான தொன் மண், புகை வானமண்டலத்துக்கு எழுந்து அங்குவியாபித்து சூரிய ஒளி பூமியில் விழுவதை மறைத்துக் கொண்டு நிற்கும்.

அந்தப் புகைமண்டலம் வானத்தை விட்டு அகல ஒரு வருடத்துக்கு மேல் எடுக்கும்.

இந்த வேளையில் ஒரே இருள் மயமாக உலகம் இருக்கும்.

இதனால் சஹாரா, அரேபிய பாலைவனங்கள் எல்லாம் அன்டாட்டிக்கா குளிர் பிரதேசமாக மாறிவிடும்.

அணு இரவு ஓர் ஆண்டுக்கு மேல் நீடிக்கும் போது, அணுஆயுத யுத்தத்தில் இருந்து உயிர் தப்பிய மனிதர்களும் இறந்து விடுவர்.

இப்படி ரஷ்ய விஞ்ஞானி கூறியிருக்கிறார்

## ரஷ்யாவைப் பற்றி அமெரிக்கருக்குத் தெரிந்தது

செவ்வாய்க் கிரகத்தைப் பற்றித் தெரிந்த அளவுதான் ரஷ்யாவைப் பற்றியும் அமெரிக்கர்களுக்குத் தெரிந்துள்ளது.

அமெரிக்க சிரேஷ்ட வகுப்பு மாணவர் மத்தியில் இங்கிலாந்து ஆசிரியர் நடத்திய சோதனையின்போது இது தெரிய வந்தது

இதனிடையில் நியூயோர்க் டைம்ஸ் என்ற அமெரிக்க நாளிதழ் அண்மையில் நடத்திய ஆய்வு ஒன்றில் பின்வரும் தகவல்களும் வெளிவந்துள்ளன

கடந்த இரண்டாம் உலக மகாயுத்தத்தில் அமெரிக்காவின் நேச நாடாக ரஷ்யா இருந்தது என்பது 44 சதவீத அமெரிக்கர்களுக்குத் தெரியாது.

இரண்டாம் உலக மகாயுத்தத்தில் அமெரிக்காவுடன் ரஷ்யா யுத்தத்தில் ஈடுபட்டது என்று 28 சதவீத அமெரிக்கர்கள் எண்ணியுள்ளனர்.

## வேலைக்குச் செல்லும் இளவரசி

எலிஸபெத் மகாராணியாரின் இரண்டாவது மகனான அன்ட்றூவுக்கும் வர்த்தகர் குடும்பத்தைச் சேர்ந்த சாரா பேர்குசனுக்கும் அண்மையில் திருமணம் நடந்தது.

சாரா, ஜெனீவாவில் வெளிவரும் "கிராபிக் ஆர்ட்ஸ்" என்ற பத்திரிகையின் ஆசிரியையாக இருக்கிறார்.

"தேன் நிலவு" முடிந்தவுடன் எனது கடமையைத் திரும்பவும் ஏற்றுக்கொள்வேன்" என்று அறிவித்துள்ளார் சாரா.

இங்கிலாந்து அரச குடும்பத்தில் ஒரு பெண் வேலை பார்ப்பது இதுவே முதல் முறை!

### நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

## அருள் நல்லூரான்

ஆறுதல் தரும் அழகிய வேலா
ஆறுமுகம் கொண்ட அம்பிகைபாலா
ஆதிசக்தி தந்த வேல்கொண்ட கையால்
ஆடிவந்து துயர் துடைப்பாயே!

நல்லூர் பதிவாழ் நாதாந்த ரூபா
நலம்பல அருளும் சர்வசக்தி நாதா
நம்பினேம் உனையே! பாடினேம் ஐயனே
நாடிவந்து துயர் களைவாயே!

அருள் கொடுக்கும் அப்பனே சரணம்
அம்பிகைபெற்ற பாலகா சரணம்
அண்டினோரை ஆதரிக்கும் வள்ளலே சரணம்
நல்லூர்பதிவாழ் நாதனே சரணம்.

—ஆ. சிவனேஸ்வரன்

## பஞ்சாமிர்தம் பலாசஅமிர்தம்

## பறங்கியர்களுக்கு எதிராக...

(3ஆம் பக்க தொடர்ச்சி) டைக்காட்டிலும் வியாபாரமென்ற போர்வையில் சென்று இடங்கோலியவர்கள் தான் இங்கும் இடம் பிடிப்பதற்காக ஆள்மாருட்டம் செய்து வந்திருக்கிறார்களென்றும் சொன்னேன் சற்றேனும் செவிசாய்த்தீர்களா?

மந்திரி: (சமாளிக்கும் நோக்குடன்) அவர்கள் இப்படிச் செய்வார்களென்று யார் கண்டார்கள்?

மன்னன்: யார் கண்டார்களா? வேடிக்கையான பதில்தான். அப்படியானால் எல்லாம் தெரிந்து கொண்ட மாதிரி பறங்கியருக்காகப் பரிந்துரைப்பதில் ஏன் முன்னின்றீர்கள்? ஆனாலும் அதன் பின் உங்கள் கடமையில் பின்னின்று விட்டீர்களே? அது ஏனாம்?

மந்திரி: (பதற்றத்துடன்) என்ன மன்னா..?

மன்னன்: பறங்கியரின் நடமாட்டங்களையும், அவர்களின் செயல் காரியங்களையும் கண்காணிக்க நம் ஒற்றர் படைக்கு நீங்கள் ஆணையிட்டிருக்கலாமே... ஏன் அப்படிச் செய்யவில்லை... எதிரிகள் கோட்டை கட்டியிருப்பது சாதாரண விடயமா? எம் தாய்த்திருநாட்டைப் பிடிக்க வல்லவா கோட்டையெழும்பி இருக்கிறது... இதை நீங்கள் மறுக்க முடியுமா?

மந்திரி: (மௌனம்)

மன்னன்: பண்ணைக் காட்டில் எழுந்திருக்கும் கோட்டை கண்வெட்டும் நேரத்தில் மந்திரத்தால் எழுந்ததல்ல... மாயாஜாலத்தினால் ஒரு நொடிப்பொழுதில் உருவானதல்ல... மாதக் கணக்கில் அந்த மண் கோட்டை கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது அதுவரை எல்லாம் மூடுமந்திரமாகவிருந்திருக்கிறது அதை மந்திரியாகிய தாங்கள் இன்றுவரை, இந்த நொடிவரை அறிந்து கொள்ள முடியவில்லையே என்பதை நினைக்கத்தான் எனக்கு வியப்பும் வேதனையும் மேலிடுகிறது. இப்படிப் புதினம் வேற்று நாடுகளிலே நடைபெற்றதுண்டா மந்திரியாரே? மன்னார் சம்பவங்களையிட்டு எனக்குள் பல குழப்பம். அதனால் எனக்கும் தளபதிக்கும் அளப்பரிய சோலிகள்... ஆனால் நாட்டு நடப்பு அறிய வேண்டிய மந்திரியாருக்கு வேறு என்னதான் வேலைகளோ?

மந்திரி: (மௌனம்)

மன்னன்: நல்லவேளை இன்று நான் பண்ணைக் காட்டுக்கு வேட்டைக்குச் சென்றிருக்காவிட்டால் அந்த மண் கோட்டையையும் கண்டிருக்க முடியாமல்... பறங்கியரின் உள்நோக்கத்தையும் உணர்ந்து கொள்ள முடியாமல்... முன்னர் எம் பாட்டன் காலத்தில் சிங்களப் படைகள் இரவோடிரவாக அரண்மனையைச் சூழ்ந்து கொண்டது போல... அல்லது அரண்மனைக்குள் நான் துயில் கொள்ளும் சப்ரமஞ்சத்தின் முன் பறங்கியர் வாளேந்தி நிற்கும் கோரக்காட்சியைத்தான் நான் காண நேரிட்டிருக்கும்...

மந்திரி: தப்பு மன்னா தப்பு... அவ்வாறு நடக்க முடியுமா?

மன்னன்: வெறும் வாய் சொல்லி என்ன பிரயோசனம் மந்திரியாரே... செயலில் ஒன்றையும் காணோமே...

இன்று நாட்டு நடப்புகள் எல்லாவற்றையும் நானே சென்று அறிய வேண்டியிருக்கிறது... அவ்வளவிற்கு நம் இராச்சிய பரிபாலனம் சீர்கெட்டுப் போய்க்கொண்டிருக்கிறது...

மந்திரி: (அதிர்ச்சியுடன்) அப்படியென்றால்..

மன்னன்: மந்திரியின் கடமைகளையும் மன்னனே கவனிக்கவேண்டியிருக்கிறதென்று அர்த்தம்... அந்த மண் கோட்டைதான் என்கண்களைத் திறந்திருக்கிறது.

மந்திரி; (சந்தேக மௌனம்)

மன்னன்: ஏன் மந்திரியாரே... பதில் ஒன்றையுமே காணோம்...

மந்திரி: (தடுமாறிக் கொண்டே) இல்லை.. இல்லை... அந்த அந்நியரை முழுக்க முழுக்க நம்பிவிட்டேனே என்று தான் யோசிக்கிறேன் மன்னா...

மன்னன்: (வஞ்சகமில்லாமல்) உண்மைதான்... நாம் எல்லோருமே ஒருவகையில் அவர்களிடம் ஏமாந்து விட்டோம். இது எமது வரலாற்றுப் பெருமைக்கே பெரும் களங்கம். அவர்கள் கோட்டை கட்டிக் கொண்ட சம்பவம் தரங்கம்பாடிக்கும் தெரிந்திருக்கும்... அங்கிருந்து அவர்களின் போர்த்துகேச தேச பறங்கிய மன்னனுக்கும் அறிவித்திருப்பார்கள் எதிரி பண்ணைக்கு வந்து கோட்டைகட்டி இருப்புக் கொண்டு இரும்பைக் காய்ச்சித் தட்டிக் கொண்டிருக்கிறான்

இதனால் நம் இராச்சியத்தின் பெருமையும் எம் பரம்பரையின் பராக்கிரமமும் நகைப்புக்கிடமாகிவிடாதா... அன்று மதுரையிலே அரசியற்றிய சந்திரசேகர பாண்டிய மன்னனை எதிரிப் படை சூழ்ந்து கொள்ள அதற்குத் தப்பிப் பிழைத்து இங்கு புகலிடம் தேடிவந்த மன்னனை தன் பெரும் படைகளோடும் சேதுபதி தளபதியோடும் மதுரைக்கு அழைத்துச் சென்று பெரும் சமராடி எதிரிப் படைகளைத் துரத்தியடித்து சந்திரசேகர பாண்டியனை மீண்டும் சிம்மாசனத்திலிருத்தி விட்டு வெற்றிப் புன்னகையுடன் நாடு திரும்பிய நம் கொள்ளுப்பாட்டன் விரோதய சிங்கையாரிய மன்னனின் கதை என்னைப்போல் உங்களுக்கும் தெரியும் தானே அண்ணா?

நமது கொப்பாட்டன் செயவீர சிங்கையாரிய மன்னனிடம் சிங்களப் படை தோற்றோடியதை நீங்கள் மறந்து விட்டீர்களா? நம் பூட்டன் குணவீர சிங்கையாரிய மன்னன் காலத்தில் நம் இராச்சியத்துக்கு செலுத்த வேண்டிய திறையை சிங்கள நாடு செலுத்தத் தவறியதால் மூண்ட கலகம் நீங்கள் மறந்ததா? நமது பாட்டன் கனகசூரிய சிங்கையாரிய மன்னன் காலத்தில் எதிர்பாராத சிங்கள படையெடுப்பைக் கண்டு பதுங்கிப் பின்னர் பாய்ந்து வெற்றிமாலை சூடியது தங்கள் நினைவில் இல்லையா? நம் தந்தை மாமன்னன் பரராஜ சேகரம் தன் வாள் சுழற்சியிலே எதிரிகளைச் சங்கரித்து வெற்றிமாலை சூடியது மறந்து போச்சா?...

இவ்வாறாக நமது தந்தை, பாட்டன், பூட்டன், கொப்பாட்டன், கொள்ளுப்பாட்டன் என்று பரம்பரை பரம்பரையாக வீரதீரத்திற்குப் பேர்போன நம் இராச்சியத்தில் இன்று எதிரிகள் வந்து கோட்டையில் குந்தியிருப்பதை நினைக்க எனக்கு வெட்கம் பிடுங்கித் தின்கிறது... துக்கம் என் நெஞ்சை அழுத்துகிறது... நீங்கள் மட்டும் சற்று விழிப்புடன் இருந்திருந்தால் எதிரிகள் இப்படிக் கோட்டை கொத்தளம் கட்டியிருக்க முடியுமா... அதைச் சிந்தித்தீர்களா?

மந்திரி: (பாசாங்குடன்) ஏதோ விதி... இப்படியாகி விட்டது மன்னா... ஆனாலும் என்ன... நாளைய போரில் அவர்களுக்குப் பாடம் புகட்டுவோம்..

மன்னன்: ஆம். பரம்பரை பரம்பரையாய் நாம் கட்டிக்காத்த மண்ணை.. எம் பாரம்பரிய பூமியை. முத்துக்கள் விளையும் எம் முத்தமிழ்த் திருநாட்டை.. முள்காடிட்டு வந்த பட்டப்பகல் திருடர்கள் தட்டிப்பறிப்பதா? எம் பொன்னான தாய்நாட்டின் தன்மானம் மேலோங்க நாளை அப் பறங்கியரைச் செருமுனையிலே புறமுதுகிட்டு ஓடச் செய்யாவிட்டால் எனக்கு உறக்கமே வராது. உறக்கமே வராது... நீங்கள் வேண்டிய ஆயுதங்களைச் செய்யுங்கள்.. வருகிறேன் மந்திரியாரே...

மந்திரி: ஆகட்டும் மன்னா...

மன்னன்: (போய்க்கொண்டே) ஆ... மறந்துவிட்டேன் ஒற்றர் படையினருக்கு உத்தரவுகள் வழங்கி விட்டேன். மற்றவைகளைக் கவனியுங்கள் (மன்னன் இவ்வாறு சொன்னதைக் கேட்டதும் மந்திரியின் வாயில் மண் விழுந்தது போல் ஆகிவிடுகிறது)

அவ்விடமிருந்து புறப்பட்ட மன்னன் ஆயுதச் சாலைக்கும், போர்ப்பயிற்சிக்கூடத்திற்கும் சென்று விட்டு அந்தப்புரம் நுழைகிறான்.

நல்லூர் இராஜதானி என்றுமில்லாதவாறு சுறுசுறுப்பு அடைகிறது. அரண்மனைச் சேனைகள் உஷார் நிலையிலிருக்குமாறு உத்தரவிட்ட சேனைத்தளபதி வீரமாணிக்கதேவன் எல்லைப் பாதுகாப்பைப் பலப்படுத்துமாறு எல்லைப் படைத்தளபதிக்கு ஓலையனுப்புகிறான். பறங்கியருடன் போர் நிகழும் போது வேறு அந்நியர் நாட்டிற்குள் பிரவேசித்துவிடக்கூடாதென்பதற்காகவே அந்த முன்னேற்பாடு காவற் படைத்தளபதி பராந்தகன் அரண்மனைப் பாதுகாப்பை வலுப்படுத்துகிறான். அரண்மனை ஒற்றர் படையினர் நகரின் நாலு திசைகளிலும் நடமாடத் தொடங்குகின்றனர்.

கொட்டும் முரசம் எட்டுத் திசையும் ஒலிக்கிறது. நாளைய போர் பற்றி நாட்டு மக்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

(தொடரும்)

## விடிவு...

(3ஆம் பக்க தொடர்ச்சி) எழுதியதாகவும் ஞாபகம்.

அதெல்லாம் இதற்குள்ளாகவா மறந்துபோயிருக்கும்? நீவிர் நும் கடிதத்தில் நினைவூட்டிப் பழைமையில் ஒரு துளியாக நாம் வந்த வழி நோக்காக இதனை இங்கு நானும் சிறிதே நினைவில் மீட்கும்படி ஆயிற்று. அவ்வளவே.

அன்றெல்லாம் அந்த விதமாக என்னைச் சூழ அபூர்வமாகச் சுடர்விட்டொளிர்ந்த தீபங்கள் இன்று அணைந்து அடங்கிவிட்டன. அதனால் இதய வீணையில் எந்தவிதமான நாதத்தையுமே இனி மீட்டமுடியாத கேடாக அது பாழாகிப்போய் கிடக்கிறது நானென்ன செய்வேனடா தம்பி? தமிழச்சிக்கு இது தருணமாய் அரிதாக ஒரு நறுமண மலர்மாலை சூட்டமனதுக்கு எழுச்சியும் மக்களுக்கு விடிவும், அது எங்கிருந்து எத்திசையாக வருமோ?

'சஞ்சீவி' - பத்திரிகைக்குப் பெயர் நன்றாக அமைந்துவிட்டது. சஞ்சீவி குன்றத்தின் சாரலிலே நாளும் நவம். நவமான அருவிச்சுனைகளும் தென்நீர் ஊற்றுகளும் குமிழிட்டெழுந்து பிரவகிக்கவும், அதன் பாதங்களிலே மருத்துவச் செடிகளிலும் பச்சிளம் மூலிகைக் கொழுந்துகளிலும் தவழ்ந்து வரும் தென்றலும் வாடையும் எங்கும் பரவி மெல்லென நம்மேனி தழுவி நமக்கெல்லாம் தீர்க்காயுளை அருளவும், காட்டு மல்லிகை பூத்துச் சொரிந்து இனிய சுகந்தம் தரவும் நீடித்த பணிபுரியும் நும் பாதையில் என்றும் திருவருள் துணை நிற்பாராக!

செல்வம் முருகானந்தன் [illegible] அளவெட்டி வடக்கு.

## நாணய மாற்று விவரம்

வாசகர்களின் நன்மை கருதி வெளிநாட்டு நாணயங்களுக்கு உரிய இலங்கை நாணய மதிப்பு விவரம் வாராந்தம் சஞ்சீவியில் பிரசுரமாகிறது.

(இது இலங்கை வங்கியின் 29 ஆம் திகதிய மாற்று விகிதமாகும்)

| வெளிநாட்டு நாணயம் | இலங்கையில் (ரூபா சதத்தில்) |
|---|---|
| ஸ்ரேலிங் பவுண் | 40. 92 |
| அமெ. டாலர் | 28. 04 |
| இந்திய ரூபா | 2. 21 |
| மார்க் (ஜெர்மனி) | 13. 49 |
| கனடா டாலர் | 19. 88 |
| பிராங் (பிரெஞ்சு) | 4. 12 |
| பிராங் (சுவிஸ்) | 16. 74 |
| அவுஸ். டாலர் | 16. 85 |

## ஒற்றை ஆட்சி...

(3ம் பக்கத் தொடர்ச்சி) யான பிரச்சினைகளுக்கு தீர்வு காணமுடியும்.

"இந்த சமூகத்தில் ஆண், பெண், குழந்தை அனைவருக்கும் உரிய இடம் அளிக்க வேண்டும். பிரிக்கமுடியாத மனித உரிமைகள், பொறுப்புக்கள் ஒவ்வொரு மனிதனுக்கும் உண்டு என்பதே இதற்குக் காரணம்.

"நாட்டுத் தலைவர்கள் ஒன்று சேர்ந்து நாட்டின் சமூக - பொருளாதார அபிவிருத்தியைக் கட்டியெழுப்புவதில் தான் உடனடித் தீர்வு தங்கி இருக்கிறது சிறுபான்மையினருக்கும் உரிமைகள் உள்ளன; அவர்களின் குறைபாடுகளும் தீர்க்கப்படவேண்டும் என்பதை பெரும்பான்மை இனத் தலைவர்கள், பெரும்பான்மை மதத் தலைவர்கள் உணர வேண்டும்

சிறுபான்மையினரின் சம்மதம் பெற்று பெரும்பான்மையினர் நடத்துவதுதான் நாடாளுமன்ற ஜனநாயகம் என்பதை பெரும்பான்மைச் சமூகத் தலைவர்கள் உணர வேண்டும்.

இனங்களுக்கு இடையேயான முரண்பாடு, மோதல்களில் நாடு தனது நேரத்தைச் செலவழிக்கக் கூடாது.

நாட்டு மக்களை பஞ்சம், பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டம், படிப்பின்மை, நோய் ஆகியவற்றில் இருந்து மீட்டு எடுக்க வேண்டிய பொறுப்பு நாட்டுத்தலைவர்களுக்கு உண்டு."

## யுத்த காலத்தில்...

(3ஆம் பக்க தொடர்ச்சி) பர்போல அளவளாவினார். இதனை நினைத்துப் பார்க்கையில் மகிழ்ச்சி ஏற்படுகிறது.

"எழுத்தாளனை அவனது எழுத்துப்படைப்பும், இலக்கிய சாதனையும் பொது வாழ்வுக்கும், தமிழ்ப் பணிக்கும் அறிமுகம் செய்துவைக்கும்" என்ற விபுலானந்த அடிகளாரின் கூற்று அப்போது நினைவுக்கு வந்தது.

1942இல்என் றுநினைவு. ஈழகேசரிப் பத்திரிகை ஆசிரியர் குழுவில் புதிதாகச் சேர்ந்து சொற்ப காலம். அதிபர் என் மேசைக்கு வந்தார். புரூப் திருத்திய பேனா அவர் கையில் திறந்தபடியே இருந்தது. பார்வையிட்ட தாள்கள் கை நழுவி என் மேசையில் வீழ்ந்தன. "ஒருவள் என்று எழுதியிருக்கிறீர். அது பிழை. ஒருத்தி என்பதுதான் சரி. ஒருவனுக்குப் பெண்பால் ஒருத்தி"— இவ்வாறு என்னைப் பார்த்துச் சொன்னார்.

தலையைக் குனிந்தபடியே என் வேலையைப் பார்த்துக் கொண்டிருந்த நான், அவர் பேச்சுக் குரலுக்கு நிமிர்ந்து அவர் முகத்தைப் பார்த்தேன். அவர் உதட்டிலே என்றைக்கும் மறையாத அந்தக் குமிண்சிரிப்பு. இத்தகைய இங்கிதம் அவரிடம் இருந்ததை இன்றும் எண்ணிப் பார்க்கிறேன்

இரண்டாவது உலகப் போரின் ஆரம்ப காலத்[illegible] திரிகைகளில் ஒரே வெடி குண்டு [illegible] படும் நாளாந்தம் புதிய தமிழ் வெடித்துப் பறக்கும் மின்னல் தாக்குதல், ஏவுகணைகள், கழுகுப் பாய்ச்சல், கடல்கண்ணி, இருட்டடிப்பு, அபாயச் சங்கு, கெரில்லாப் போர், கவசஅணி,- இவற்றுக்குச் சிகரம் வைத்தாற்போல் அணுகுண்டு இவற்றை யுத்த அகராதி எனலாம் இன்றும் இவ்வாறு சொற்றொடர்களை நமது பிரதேச தமிழ்த் தினசரிகளில் காணமுடிகிறது.

எனது மனதைவிட்டு அகலாத கவலைமிக்க நினைவு எனது தாயாரின் மறைவு நடக்கக் கூடாதது நடந்து விட்டது சாவு எத்தனை கொடிது. என் வாழ் நாள் முழுதும் என் கண் முன்னே எரிந்து கொண்டிருந்த தீபம் அணைந்து விட்டது. உடலை விட்டு உயிர் பிரிவதற்கு ஒப்பாக ஒரு சுடர் விளக்கு அணைந்து விடுவதைத் தான் சொல்ல முடியும்.

ஆசிரியர் இ.பி ஹரன்' அமரர் டாக்டர் சண்முகரத்தினம், திரு. கேசி தங்கராஜா, அமரர் தம்பர்மாஸ்டர், திரு இராஜ. அரியரத்தினம் ஆகிய பத்திரிகைத்துறைப் பிரமுகர்களை மகிழ்வுடன் மனத்திரையில் நினைவுகூர்கிறேன்.


யாழ் மாவட்ட கலாசாரக் குழுவினர் எனது சிறுகதைகளின் தொகுதியொன்றை வெளியிட முன்வந்தமை மகிழ்ச்சி தரும் செய்தியாகும்.

—இவ்வாறு தனது பேட்டியில் கூறிமுடித்தார் அவர்.

பேட்டி: வே. வரதசுந்தரம்

## சொற்சிலம்பம்

### போட்டி இல. 31



அனுப்புபவர் பெயர்:-

திரு/திருமதி/செல்வி: ..........................................

..........................................

விலாசம்: ..........................................

..........................................

ஒப்பம்: ..........................................

### போட்டி விதிகள்

சொற்சிலம்பம் போட்டி விதிகள் ஒவ்வொரு மாதமும் முதல் வாரத்தில் வெளியாகும்

**மேலிருந்து கீழ்**

1. வேகம்
2. திவ்வியபாதம்
3. இதிகாசம்
4. சுவர்
5. நாற்காலி
8. சேறு
11. பேரிகை
12. கிரி
13. குருடன்
14. தங்களுடையது
15. சீக்கிரம்
17. வஞ்சம்
18. வித்தை
19. இது வரும்போது துர்நாற்றம் வீசும்
21. கூட்டு

**இடமிருந்து வலம்**

1. அருள் மிகுந்த முருகன் தலம்
6. செல்வம்
7. ஊழ்
8. மறைவில் திட்டமிடுவது
9. காப்பு
10. கல்விக்கு இது இல்லை என்பர்
11. கிரீடம்
12. அறிவு
14. சிரசு
16. இன்ப அனுபவம்
19. மத்தி
20. விடை
21. வலு
22. அடவி
23. நொடி

### சொற்சிலம்பம் இல. 29 விடைகள்

**இடமிருந்து வலம்**
1. அநாவசியம் 6. கிரிகை 7. கூனி 8. வினைஞர் 9. துருவம் 11. மைதா 13. ரசி 14. முதுகு 17. முதலாளி 18. குரல் 19. யது 21. பனிசு 22. காலவாய்

**மேலிருந்து கீழ்**
1. அதிமதுரம் 2. நாரி 3. வகை 4. யமுனை 5. ஆனி 7. கூர்மை 8. விம்முதல் 10. ருசி 12. தாளம் 15. துலா 16. குளியல் 17. முரசு 18. குவி 20. துவா

### சொற்சிலம்பம் இல. 29 பரிசு பெற்றவர்கள் விவரம்

முதலாம் பரிசு:- செல்வன் ம. நிருபன் மே/பா வ. மயில்வாகனம் அராலி வடக்கு, வட்டுக்கோட்டை.

இரண்டாம் பரிசு:- அ. ஜெபநேசன் செல்மோரீஸ் லேன், ஊர்காவற்றுறை

மூன்றாம் பரிசு:- செல்வி ஞா. நிவேதனா 35, புகையிரதநிலைய ஒழுங்கை, சாவகச்சேரி.

★ குறிப்பு:-
பரிசு பெற்றவர்கள் கடிதம் மூலம் அழைக்கப்படுவர். பரிசுப் பணத்தைப் பெறுவதற்கு பத்திரிகையில் வெளியான பெயருக்குரியவரே உரிய அடையாள அத்தாட்சிகளுடன் நேரில்வரவேண்டும் எக்காரணம் கொண்டும் வேறு எவரிடமும் பரிசுப்பணம் கையளிக்கப்படமாட்டாது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**ஹரி ஓம்**

'ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே'.
10 மில்க்வைற் நீலசோப் அல்லது 2 பார் சோப் மேலுறைகளை கொடுத்து ஒரு அழகிய கிருஷ்ணர் ஸ்ரிக்கரைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

—மில்க்வைற் யாழ்ப்பாணம்.



# சஞ்சீவி

30 - 08 - 1986 சனிக்கிழமை



**மாணவ மணிகளே!**

சீருடைகளைச் சலவை செய்ய பாவியுங்கள் நுரைவளம் கூடிய மில்க்வைற் சலவைப் பவுடர் பாவித்த 20 வெற்றுப் பைக்கற்றுகளை அனுப்பி அழகிய கைலேஞ்சி ஒன்றைப் பரிசாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.

—மில்க்வைற் யாழ்ப்பாணம்


# பூட்டோவின் கதிதான் பெனஸிருக்குமா?

பாகிஸ்தானின் பிரதான எதிர்க்கட்சி வான மக்கள் கட்சித் தலைவி பெனஸிர் பூட்டோ கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்.

அரச விரோத நடவடிக்கையில் ஈடுபட்டதாக அவருக்கு எதிராக குற்றச் சாட்டுகள் செய்யப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் புதிதாகத் தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும் என்று, பெனஸிர் பூட்டோவின் மக்கள் கட்சியைப் பிரதான அங்கமாகக் கொண்ட பத்துக் கட்சிக் கூட்டணி அதிபர் ஸியா—உல்—ஹக்கின் தடவைகள் பெனஸிர் பூட்டோவின் கோட்டையாக இருந்து வரும் சிந்து மாகாணத்துக்கும் மற்றும் முக்கிய நகரங்களுக்கும் தற்போது இராணுவம் அனுப்பப்பட்டுள்ளது.

பெனஸிர் பூட்டோவை விடுதலை செய்யக் கோரி நடைபெற்ற வன்முறை ஆர்ப்பாட்டங்களில் சுமார் 100 எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வரை கொல்லப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானில் தற்போது நடைபெறும் சம்பவங்களை அவதானிக்கும் போது சுல்பிகார் அலி பூட்டோவின் கதிதான் கொல்வதற்கு 1979 இல் இடம்பெற்ற ஆப்கன் மீதான சோவியத் இராணுவத் தலையீடும் ஒரு காரணமாகும்.

**அமெரிக்க உதவி**

இதனைச் சாட்டாக வைத்து பாகிஸ்தானுக்கு அமெரிக்கா பெரும் அளவில் இராணுவ, பொருளாதார உதவிகளை வழங்கி வருகிறது.

பாகிஸ்தானுக்கு அடுத்த ஆறு வருட காலத்தில் 400 கோடி அமெரிக்க டாலர்களை உதவியாக வழங்கும் மற்றொரு மாபெரும் உதவித் திட்டம் ஒன்றும்

# உலக உலா

*என்.பி.சீலன்*

ஒருக்கு வேண்டுகோள் விடுத்திருந்தது.

செப்டம்பர் 20 ஆம் திகதிக்கு முன்னர் அதிபர் ஸியா—உல்—ஹக் சகல கட்சிகளும் சுதந்திரமாகப் பங்கு பற்றக் கூடிய பொதுத் தேர்தல் ஒன்றுக்கான திகதியை அறிவிக்க வேண்டும் என்றும் இந்த பத்துக் கட்சிக் கூட்டணி காலக்கெடு விதித்திருந்தது.

பாகிஸ்தானில் மீண்டும் ஜனநாயகத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் ஐந்து வருடங்களுக்கு முன் இக்கூட்டணி அமைக்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர்கள் தொடர்ந்து கைது செய்யப்பட்டால் இந்த காலக்கெடுவை ஆகஸ்ட் 18 ஆம் திகதிக்கு மாற்றப் போவதாகவும் இக்கூட்டணி அதிபர் ஸியாவை எச்சரித்திருந்தது.

பாகிஸ்தான் சுதந்திர தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட மாபெரும் எதிர்ப்புக் கூட்டங்களை அடுத்து ஆகஸ்ட் 14 ஆம் திகதி பெனஸிர் பூட்டோ கைது செய்யப்பட்டார். இவரைத் தொடர்ந்து அடுத்து நூற்றுக்கணக்கான எதிர்க்கட்சித் தலைவர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

**இராணுவச் சட்டம்**

ஒன்பது ஆண்டுகளுக்குப் பின்னர் கடந்த டிசம்பர் மாதம் பாகிஸ்தானில் இராணுவச் சட்டம் நீக்கப்பட்டது.

அதன் பின்பு முதல் அவரின் மகள் பெனஸிர் பூட்டோவுக்கும் ஏற்படுமா? என்று சந்தேகிக்கத் தோன்றுகிறது.

1977 ஆம் ஆண்டு நடைபெற்ற புரட்சி மூலம் பதவிக்கு வந்த ஸியா - உல் - ஹக் 1971 முதல் பதவியில் இருந்த அப்போதைய பிரதமர் சுல்பிகார் அலி பூட்டோவைக் கைது செய்து அவருக்கு எதிராக கொலைக் குற்றச்சாட்டு வழக்கு ஒன்றை ஸியா தாக்கல் செய்திருந்தார்.

அதில் குற்றவாளியாகத் தீர்க்கப்பட்டு உலக நாடுகளின் அபிப்பிராயத்துக்கு எதிராக 1979 ஆம் ஆண்டு சுல்பிகார் அலிபூட்டோ தூக்கிலிடப்பட்டார்.

பூட்டோவைத் தூக்கிலிட்ட நாள்முதல் பாகிஸ்தானில் பொதுத் தேர்தல் நடத்துவதற்கு ஸியா - உல் - ஹக் எத்தனையோ திகதிகளை அறிவித்துவிட்டார்.

பெனஸிர் பூட்டோவின் மக்கள் கட்சி தொடர்ந்து செல்வாக்குப் பெற்றிருந்ததால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டது போன்று அவரால் பொதுத் தேர்தலை நடத்த முடியவில்லை.

**தேர்தல்**

எனினும் இந்த 10 கட்சிகள் கூட்டணியின் பகிஷ்கரிப்புக்கு மத்தியில் 16 மாதங்களுக்கு முன்னர் அதிபர் ஸியா - உல் - ஹக் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்தி முடித்தார்.

அந்தத் தேர்தலில் அரசியல் கட்சிகள் பங்குபற்றத் தடைவிதிக்கப்பட்டிருந்தது.

அந்தக் "கட்சியற்ற பொதுத் தேர்தல்" மூலம் அப்போது பதவிக்கு வந்தவர்தான் முகம்மத் கான் ஜுனேஜோ.

அதிபர் ஸியா - உல் - ஹக் ஜனாதிபதியாகவும், முகம்மத் கான் ஜுனேஜோ பிரதமராகவும் இருந்து கொண்டு பாகிஸ்தானை தொடர்ந்து சர்வாதிகாரப் பாதையில் இட்டுச் செல்கிறார்கள்.

அதிபர் ஸியா - உல் - ஹக் தனது நிலையை மேலும் ஸ்திரப்படுத்திக் தற்போது அமெரிக்க சாம்ராஜ்யத்தின் பக்கபலத்தில் இருந்து வருகிறது.

ஆப்கானிஸ்தானில் சோவியத் படைகள் இருப்பதால் அமெரிக்காவைப் பொறுத்தமட்டில் ஆப்கானிஸ்தானின் அண்டை நாடான பாகிஸ்தான் கேந்திர முக்கியத்துவம் உள்ள நாடாகக் கருதப்பட்டு வருகிறது.

பாகிஸ்தான் அரசியலில் வல்லரசுகளின் ஆதிக்கப் போட்டியும் கலந்திருப்பதால் அமெரிக்காவின் முழு ஆதரவுடன் செயற்பட்டுவரும் அதிபர் ஸியாவை பதவி கவிழ்ப்பது தற்போதைக்கு சாத்தியப்படும் என்று சொல்வதற்கில்லை.

## உத்தேச...

(2ம் பக்கத் தொடர்ச்சி)

சபையை எமக்கெனக் கோர வேண்டும்.

கூட்டணியினரும் எமது இந்த ஆலோசனையை ஏற்றுக் கொள்வர்'' —என்று கூறினர்.

சட்டத்தரணி ஜனாப். யூ. எல். எம். முகைதீன், அட்டாளைச்சேனை பள்ளிவாசல் பிரதம நம்பிக்கையாளர் ஜனாப். எம். ஐ. அசுகுலெவ்வை, முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் கிழக்குப் பிராந்திய பணிப்பாளர் ஜனாப். எம். ஐ. உதுமா லெவ்வை, ஜனாப். றவூப் காரியப்பர், பேரவைச் செயலாளர் ஜனாப். ஏ. அமீர்மேசா உட்பட மற்றும் பலரும் கருத்துரைகள் வழங்கினர்.


**உள்ளும் புறமும்**
*குறுமுனி*

'குறுமுனி' எழுதும் உள்ளும் புறமும் இடமின்மை காரணமாக இந்த வாரம் பிரசுரமாகவில்லை. அடுத்த வாரம் வழமைபோல் அப்பகுதி வெளிவரும்.

— ஆசிரியர்


## திருமலையில்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குச் சென்ற ஆயுதப்படையினர் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

ஆயுதப்படையினர் முகாமுக்குத் திரும்புகையில், வில்லூன்றிக் கந்த சுவாமி ஆலயத்தைச் சேர்ந்த குருக்கள் ஒருவரையும் இன்னொரு தமிழ் இளைஞரையும் கைது செய்து விசாரணைக்காக அழைத்துச் சென்றனர்.

(க.எ-150)

## இன்றுநல்லூரில் -

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாலை 3 மணிக்கு நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நிகழ்ந்து வரும் தொடர் சொற்பொழிவில் 'குருவாய் வருவாய்' என்னும்பொருள் பற்றி ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா அவர்கள் சொற்பொழிவாற்றுவார்

மாலை 6.15 மணிக்கு ஆலய முன்பாகவுள்ள நாவலர் மணிமண்டப வளவில் தெய்வீகத் தமிழிசை நிகழ்ச்சியில் திரு. என். கணபதிப்பிள்ளை அவர்களின் இசைக் கச்சேரி இடம்பெறும்.

மாலை 6.30 மணிக்கு ஆலய மேற்கு வீதியில் உள்ள பிள்ளையார் கோவில் மண்டபத்தில் திருமதி வசந்தா நித்தியானந்த சர்மா அவர்களால் 'வீரவாகுதேவர் தூது' என்ற பொருளில் கந்த புராணத் தொடர் பிரசங்கம் இடம்பெறும்

## சிறுமி கடத்தப்பட்டார்

சாவகச்சேரி, ஆக. 30

கடந்த புதன்கிழமை நெல்லியடியில் சைக்கிளில் சென்ற சிறுமி ஒருத்தி போட்டார் சைக்கிளில் வந்த இளைஞர்களினால் பலவந்தமாகக் கடத்தப்பட்டார்.

கடத்தியவர்கள் சிறுமியைத் தமது அடித்தளம் போராளிகளின் இருப்பிடம் பற்றி விசாரித்ததாகக் கூறப்படுகிறது.

இச்சிறுமி வதிரி இருதயக் கல்லூரிக்கு முன்பாக வைத்து விசாரிக்கப்பட்டபின்னர் விடுவிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(உ-70)

## தமிழ்மொழி--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

(இதற்கு சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படமாட்டாது) அல்லது

3. கிழக்கு மாகாணம் முழுமையாக இருக்கவேண்டும் என்று கூட்டணி விரும்பினால் வடக்கு மாகாண சபைக்கும் கிழக்கு மாகாண சபைக்கும் இடையே ஸ்தாபன ரீதியான நிர்வாக இணைப்பை உறுதிப்படுத்தக் கூடியதான அமைப்பு ஏற்படுத்தப்படும் (இதற்கும் சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்படமாட்டாது)

(ஆ-எ)

## பட்டங்கள்..

(1-ம்பக்க தொடர்ச்சி)

களம் பனைவளம், நீர்வளம், நிலவளம், தாவரவியல், இயற்கையியல் உட்படப் பல துறைகளின் விருத்திக்கும் பல்கலைக் கழகப் பட்டங்கள் உதவ வேண்டும்.

இவற்றை இன்று பட்டம்பெறும் மாணவர்கள் மனதிலிருத்தி மண்ணுக்காக, மக்களுக்காக உழைக்க உறுதி பூணவேண்டும்.

# மட்டுநகருக்கு நிரந்தர பஸ்சேவை

## வாரத்திற்கு 3 நாட்கள் சேவை

யாழ்ப்பாணம், ஆக. 30

நாளை முதல் வாரத்தில் மூன்று தினங்கள் (ஞாயிறு, செவ்வாய், வியாழன்) யாழ்ப்பாணத்தில் இருந்து மட்டக்களப்புக்கு பஸ் சேவை நடத்தப்படும் என்று வடபிராந்தியப் போக்குவரத்துச்சபை அறிவித்துள்ளது.

தினமும் காலை 5மணிக்கு இந்த பஸ் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும்.

மட்டக்களப்பில் இருந்து திங்கள், புதன், வெள்ளி ஆகிய நாட்களில் யாழ்ப்பாணத்துக்குப் பஸ் சேவை இடம்பெறும்.

இத்தினங்களில் காலை 6 மணிக்கு மட்டக்களப்பில் இருந்து பஸ்கள் புறப்படும்.

இந்த அட்டவணையின் படி நிரந்தரமாக யாழ் - மட்டக்களப்பு, மட்டக்களப்பு - யாழ் பஸ்சேவை நடைபெறும். (உ-எ)

## டிக்ஸிற்--

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துக் கொண்டார் என்று கொழும்பின் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

வடக்கு - கிழக்கு இணைப்புக் குறித்து அரசின் மாற்றுத் திட்டம் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்களிடம் கையளிக்கப் பட்டுள்ளதாக ஜனாதிபதி இந்தியத் தூதரிடம் தெரிவித்தார் என்றும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (அ-எ)


## மாதாந்த சீட்டு 10 - 09 - 86இல் ஆரம்பிக்கப்படுகிறது

பணத்தை இலாபகரமாகச் சேமிப்பதற்கும் அவசரத் தேவையேற்படின் நியாயமான கழிவுடன் அதிக நிபந்தனைக்குட்படாதவாறு மீளப் பெறவும் வழியமைக்கும் சாதனமே 'சீட்டு' ஆகும்.

இம்முறையில் பணம் கையாளப்படல் பாரம்பரியமாக எமது மக்களால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது ஆனாலும் துரதிஷ்டவசமாக நிறுவன ரீதியில் இம்முறை நடைமுறையாவது மிக அரிதாகவேயுள்ளது.

இதனை ஒழுங்கமைத்து புது வடிவங்களில் வாடிக்கையாட்களின் அபிப்பிராயங்களோடு நிறுவன ரீதியாக மேற்கொள்கிறோம். நிறுவன ரீதியாக மேற்கொள்ளப்படும் இவ்வகைச் செயற்பாட்டினூடாக முறை சாராசத்துறையினரின் சேமிப்புக்களைத் திரட்டி அவற்றை அபிவிருத்திக்கான மூலதனமாக்கலில் ஈடுபடுத்துவதற்கு நிறுவனம் முடிவு செய்துள்ளது.

சகல விபரங்களுக்கும் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்:


**அபிவிருத்தி நிதியம்**
337, கஸ்தூரியார் வீதி, (கன்னாதிட்டி)
யாழ்ப்பாணம்

உடனே ஆரம்பமாகிறது! மாதாந்தச் சீட்டு உறுப்பினர் மாதங்கள் 10

| தொகுதி | சீட்டுத் தொகை | பெறுமதி |
|---|---|---|
| A | 100-00 | 1,000-00 |
| B | 250-00 | 2,500-00 |
| C | 500-00 | 5,000-00 |
| D | 1,000-00 | 10,000-00 |
| E | 5,000-00 | 50,000-00 |



# மானிப்பாயில்




பாதுகாப்பான சூழலில்
சர்வதேச தொலைத்தொடர்பு நிலையம்
உலகின் எந்தப் பாகத்துடனும் நொடிப் பொழுதில் தொடர்புகொள்வதற்கு

**INTERNATIONAL COMMUNICATION COMPLEX**
**MANIPAY.**

- உள்நாட்டு வெளிநாட்டு தொலைத்தொடர்பு
- ரெலெக்ஸ் வசதி
- இரவு-பகல் எந்நேரமும் சேவை

★ தன்னியக்க மின்பொறிக் கருவிகள் பொருத்தப்பட்ட ஒரே நிறுவனம்.
★ கைதேர்ந்த தொலைத்தொடர்பு ஊழியர்களின் அன்பான உபசரிப்பு.
✳ குளிரூட்டப்பட்ட அறைகளில் இதமான சேவை

# இன்ரநாஷனல் கொமினிகேஷன் கொம்பிளெக்ஸ்

**282 A, யாழ்ப்பாண வீதி, மானிப்பாய்.**

- வெளிநாடுகளில் வசிக்கும் உங்கள் உறவினர்களுடன் தொடர்பு கொள்ளும்போது இலங்கை நாணயத்தை விணக்காமல் வெளிநாட்டு நாணயத்தில் கட்டணம் செலவு செய்வதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கான ஒழுங்குகளை நேரில்செய்து கொள்ளலாம்.
- உங்கள் சேவையே எமது நிறைவு.



இப்பத்திரிகை யாழ்ப்பாணம், மின்சாரநிலைய வீதி, இரண்டாவது ஒழுங்கை 15-ஆம் இலக்கத்தில் உள்ள உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட், ஸ்தாபனத்தாரால் அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி 30 - 08 - 1986.

Printed and Published by Uthayan Publications (Private) Ltd, 15 Second Lane, Power House Road, JAFFNA.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org